Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

இலிங்கபுராணம்



KARTHIKA
ACC. NO.
46359

"தமிழ் வேத நாவலர்"

"வைத்தியமணி"

சற்குரு. சித.வே. ஷண்முகநாத பிள்ளை

முத்தமிழ் வேதத் திருச்சபை

தேவகோட்டை

Koviloor Digital Library

Koviloor Digital Library

5/

உ
சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

இலிங்க புராணம்

இந்நூலாசிரியர்

"வைத்தியமணி"
"தமிழ் வேத நாவலர்"
முத்தமிழ் வேதத் திருச்சபை

சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை
தேவகோட்டை.

இஃது
கனடா டாக்டர் சித. ஏகப்பன் செட்டியார் அவர்கள்
ஆர்வத்தினாலும் பேரன்பினாலும்

தேவகோட்டை
ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸில் பதிப்பிக்கப் பெற்றது.

வெளியீடு
முத்தமிழ் வேதத் திருச்சபை
முத்தாத்தாள் நடுநிலைப் பள்ளி
வ.பெரி.மு. தெரு, தேவகோட்டை - 630 302.

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
46359

Koviloor Digital Library
சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

நூல் பெயர் : இலிங்கபுராணம்
முதற்பதிப்பு : தாரண ஆண்டு (2004) ஆவணி மாதம்
நூலாசிரியர் : சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை
உரிமை : முத்தமிழ் வேதத் திருச்சபையோர் தேவகோட்டை
பக்கங்கள் : 48 (சுஅ) பக்கங்கள்
வெளியீடு : முத்தமிழ் வேதத் திருச்சபையோர் தேவகோட்டை
தாள் : 16 கிலோ மாப்லித்தோ
நூலின் அளவு : டெமி 1/8 சைஸ்
விலை : ரூ. 51 (ருயக)
எழுத்து : 12 புள்ளி
உரிமை : முத்தமிழ் வேதத் திருச்சபையோர் தேவகோட்டை
பைண்டிங் : வெல் பவுண்டு பைண்டிங்
கிடைக்குமிடம் : Dr. SV. முருகேஷ் R.I.M.P. A.M.I.H.
முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர்
சித்த மருத்துவம்
கிணற்றுநீர் நிபுணர், புதுக்கோட்டை

நலந்தா புத்தகக் கடை
வடக்கு வல்லம்பர் தெரு. காரைக்குடி - 630 001.
போன் : 95+4565+234807

இராம. ஆதிரெத்தினம்
இணைச்செயலாளர். முத்தமிழ் வேதத் திருச்சபை
19, ரெகுநாதபுரம் மேற்கு. தேவகோட்டை.
போன் : 95+4561+270113, 272899

கணினி & அச்சு அமைப்பு : **ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ்**
தேவகோட்டை - 630 302.
போன் : 95+4561+273347, 261361
email : swamirajbal@hotmail.com

Koviloor Digital Library

5/1

உ
சிவமயம்

இந்நூலாசிரியர்
"தமிழ் வேத நாவலர்" "வைத்தியமணி"
சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை
முத்தமிழ் வேதத் திருச்சபை
தேவகோட்டை.

Koviloor Digital Library

உ
சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

இலிங்க புராணம்

முன்னுரை

எம் ஞானத் தெளிவு குருவின் இணையடி என் உச்சி மேற்கொண்டு இலிங்க புராணத்திற்கு முன்னுரை எழுதுவோமாக.

நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடி
னந்திக ளுல்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரம
ரென்றிவ ரென்னோ டெண்மரு மாமே. என்பது ஆகமம்.

இறைவனின் அருள் பெற்றவர்கள் சனகர், சனந்தனர், சனுதனர் சனற்குமாரர், சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்ரமர், திருமூலர் ஆகிய எண்மர். இவர்களில் இறைவன் தமிழ் ஆகமம் செய்வதற்காக திருமூலரை நமக்குத் தந்தார்.

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் ருக முயறவஞ் செய்கிலி
ரென்னைநன் ருக விறைவன் படைத்தனன்
றன்னைநன் ருகத் தமிழ்செய்யு மாறே என்பது ஆகமம்

நம் மூலமுதல் குரு திருமூலரின் ஆகமமாகிய திருமந்திரம் நாம் பெற்ற அருட் பெருஞ்செல்வம். நம்முடைய முன்னோர்கள் ஞானியர்கள் என்பதை மறந்து சனுதனிகள் பரம்பரையில் வந்தவர்கள் என்பதை மறந்து நம் முன்னோர்கள் தந்த பிரமவித்தையை மறந்து தடுமாறி திரியும் நம்மை நல்வழியில் நெறிவழியே செல்ல அமைத்து தந்தது தான் இலிங்க புராணம் ஆகிய முழு முதனூல்.

நம் இறைவனுகிய பதி அகத்தில் அமைந்திருப்பதை ஓதி உணர்ந்து அறிவதற்கு பதிகம் ஆக்கி தந்த திருஞான சம்பந்தர், அப்பர் சுவாமிகள், சுந்தரர் திருகுச்சுழியாம் சிவமயச் சாவித் திறந்து (உ) அகத்தில் இறைவன் வாசம் செய்வதற்கு மாணிக்கவாசக சுவாமிகள் ஆக்கிய திருவாசகமும் நாம் பெற்ற அருட் பெருஞ்செல்வம்.

நம் தாய் தந்தையர்கள் நமக்கு விட்டுச் சென்ற பொருட் செல்வத்தைக் கொண்டு வாழ நினைக்கும் நாம் ஏன் நம்

Koviloor Digital Library

முன்னோர்கள் நமக்காக ஆக்கித் தந்த அருட்பெருஞ் செல்வமாகிய நூல்களை வாசித்து இனிமையான வாழ்வு வாழ முயலவில்லை. அதுவும் கலியின் கொடுமை போலும்.

இக்கலியின் கொடுமைதீர எம்ஞானத் தெளிவு குரு சித.வே. ஷண்முகநாதபிள்ளையை இறைவன் நமக்காக நம் பரம்பர இனியாவது நெறிவழியே சென்று நேர்மையுள் ஒன்றி வாழ படைத்திருக்கிறார். சிறு பிராயம் முதல் புராணம். இதிகாசங்கள், தேவாரம், திருவாசகம் ஆகமம் கைவரப் பெற்று கலை பயின்று அக்கலையின் மூலம் வாசி மனதைக் கூட மனம் உயிரைக் கூட உயிர் பிரமத்தைக் கூடி அந்த பிரமத்துடன் ஒன்றி நின்று மிகத் தெளிவாக ஆக்கித் தந்த நூல்கள் தான் பல. அவற்றுள் இலிங்க புராணம் ஆகிய இந்நூல் பூரணமாக பொலியும் பழைமையான ஒன்று தான் புராணம். அதில் "இல்லில் இங்காம்" இலிங்கம் என ஆதல் போல் நம் இல்லமாகிய அகத்தில் இறைவன் இங்கிருப்பதை ஓதி உணர்வதற்கு ஆக்கிய முழு முதல் நூல் இலிங்க புராணம்.

வாகீசராகிய அப்பர் சுவாமிகள் எழுதிய தசபுராணம்

"நிரவொலி வெள்ள மண்டி நெடுவண்டமூட
நிலனின்று தம்ப மதுவப்
பரமொரு தெய்வ மெய்த விது வொப்பதில்லை
இருபாலு நின்று பணியப்
பிரமனு மாலுமேலைமுடியோடு பாதம்
அறியாமை நின்ற பெரியோன்
பரமுத லாயதேவர் சிவனாய மூர்த்தி
யவனா நமக்கொர் சரணே."

தசபுராணப் பதிகத்தில் இரண்டாவது பாடல் இது. இப்பாடல் தான் எம் ஞானத் தெளிவு குரு இலிங்க புராணம் ஆக்குவதற்கு மறைமுதல் நூலாக அமைந்தது. இதற்குள் பொதிந்து கிடக்கும் சூட்சமத்தை தெளிவாக ஆக்கி தந்திருக்கிறார்கள். கலை பயின்று அகத்துள் கண்ட காட்சியை எல்லாம் புறத்தே நமக்காக ஆக்கித் தந்த பெருங்கருணையின் விளைவு தான் கோயில்கள். எம் ஞானத் தெளிவு குரு பதி துலங்கும்படி மூலராகமங் கண்டு ஞானா நுபவமுணர்ந்த படியே இலிங்க புராணமாம் இந்நூல்பகர்ந்திருக்கிறார்கள்.

Koviloor Digital Library

இலிங்க புராணத்தில் அட்ச லிங்கம் (௬௰) 60. திருப்பதி மூர்த்தி லிங்கம் (௱அ) 108. சித்தாந்த லிங்கம் (உ௱எ௰ரு) 275. சூக்கும லிங்கம் (உ௰எ)27. அதீத லிங்கம் (ச) 4. புரணலிங்கம் (க) 1. அமிர்த லிங்கம் (உ௰க) 21. சோதி லிங்கம் (க) 1. ஆக மொத்தம் 504 (ரு௱ச). இது அண்ட பிண்டமாக இருப்பதால் (504+504)=1008 (௲அ) விச்சுவ லிங்கம் ஆக நிறைவு பெறுகிறது.

நம் அகத்தில் இறைவன் இருப்பதை எப்படி உணர்வது அதற்குத் தான் நம் திருமூலர்

"அறங்கேட்டு மந்தணர் வாய்மொழி கேட்டு
மறங்கேட்டு வானவர் மந்திரங் கேட்டு
புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் மீசன்
றிறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே" என்றும்

"நாடு நகரமு நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே" என்றும்

இயம்புகிறுர். நம் ஞானத் தெளிவு குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை அவர்கள் மூலமுதல் குருவாகிய திருமூலர் வழிவந்ததைக் காட்டவே அவர்தம் நூலில் முன்னேர்கள் யாவருக்கும் சரணமடித் துணையே என்று எழுதிய பாங்கு நாமெல்லாம் முன்னேர்களைப் போற்றி அவர்கள் காட்டிய வழியில் நடக்க அறிவுறுத்துகிறது.

திருஞான சம்பந்தர், அப்பர் சுவாமிகள், சுந்தரர் மூவரும் நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும் சென்று பதிகம் அமைத்து தந்திருக்கிறுர்கள். அவர்கள் தந்த பதிகம் பாடிய திருத்தலங்கள் 275 (உ௱எ௰ரு). இந்த 275 திருத்தலங்களும் சிவலிங்கத் திருத்தலங்கள். ஏன் 275 திருத்தலங்களை மட்டும் பதிகமாக பாட வேண்டும். அதனுடைய சூட்சமம் தான் என்ன ? அதில் பொதிந்து கிடக்கும் பழமை தான் என்ன ? பூரணமாக பொலியும் பழைமை இதுதான் எனத் தெளிவாக விளக்கிக் காட்டுவது தான் திருமூலர் வழிவந்த எம் ஞானத் தெளிவு குரு எழுதிய இலிங்க புராணம்.

Koviloor Digital Library

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று நம் ஔவைப் பாட்டி "கொன்றை வேந்தன்" நூல் மூலம் நமக்கு அறிவுறுத்திகிறார். ஆலயம் தொழுவதில் உள்ள சூக்குமத்தையும் பார்ப்போம்.

இமையோர், இருடிகள், முனிவர்கள், சித்தர்கள், பத்தர்கள், அடியார்கள் திருக்கூட்டமும் போற்ற நால்வேத வேதாந்தம் ஆகிய ஐந்தும் வடபுலத்திற்றலமாய் அமைத்து அதிற் கால் கொண்டு எழும் தென்திசையில் இருபத்தேழொன்றாய்த் தலங்கள் அமைந்தன. நம் 32 உறுப்புக்களில் 27 உறுப்புகள் சுவாசத்தினால் தசவித நாடியில் கும்பித் தடங்கும். ஆகவே 270 ஆகும். ஆக மொத்தம் 275 தலங்களும் தமிழ் மறையில் ஓதப் பெற்றுள்ளன. முத் தமிழ்நாட்டில் தான் கோள் மூன்றும் இராசி வழி போந்து சஞ்சரிக்கும் புகலிடம் உள்ளதாற் முருகவேள் வந்தாட்சி கொண்டதும் கலியின் கொடுமை கெட அருள் தந்ததும் இதுவே காரணம். இதன் காரணமாகத் தான் முத்தமிழ் நாட்டில் திருக்கோயில்கள் எங்கெங்குமாக அமைந்து அகத்தின் கண் உள்ளதைப் புறத்தே அமைத்து நம் முன்னோர்கள் நமக்கு தந்திருக்கிறார்கள். இதையே திருமூலர்

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபு ரவாசற்
றெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே.

என்றும்,

உள்ளத் தொருவனை யுள்ளூறு சோதியை
யுள்ளம்விட் டோரடி நீங்கா வொருவனை
யுள்ளமுந் தானு முடனே யிருக்கினு
முள்ள மவனை யுருவறி யாதே. என்று

தான் கண்ட அகக்காட்சியெல்லாம் வெளியில் கற்சிதஞ் செய்த வுண்மை கண்டு தெளிந்து மேலும் பசுவாம் நாம் பதியாம் இலிங்கமுடன் பிரியாது இலயம். கொள்ள ஆலயம் சரியையாய்ச் சைவ சித்தாந்த ஞானக் காட்சியாக அமைத்து தந்த சூட்சமம் புரிந்து தொழுவது நம் தலையாய கடமை ஆகும். இன்னும் தெளிவாக எம் ஞானத் தெளிவு குரு நமக்கு ஆக்கித் தந்ததை காண்போம், காண்க.

Koviloor Digital Library

உ

சிவமயம்

நம் உறுப்புக்கள் 32 முப்பத்திரண்டும் கூடிய ஒன்று மெய்	நட்சத்திரம் 28		சூக்கும்லிங்கம் ஆகிய வீரட்டம் ௮(8), சத்தத்தானம்௭(7), வலியாதியர் (நவக்கோள்) ௯ (9) நவநாயத்தலம் சந்தித்தானம் ௩ (3)
க. குழல் -	அச்வதி -	வீரபத்திரன் -	திருப்பறியல் வீரட்டம்
உ. நெற்றி -	பரணி -	காலகாலன் -	திருக்கடவூர் வீரட்டம்
௩. பிடரி -	ரோகிணி -	சலந்தாரி -	திருவிற்குடி வீரட்டம்
௪. உச்சி -	திருவாதிரை -	அந்தகாரி -	திருக்கோவலூர் வீரட்டம்
௫. புட்டம் -	பூசம் -	காமாரி -	திருக்கொறுக்கை வீரட்டம்
௬. இடை -	ஆயில்யம் -	கெஜாரி -	திருப்பழுவூர் விரட்டம்
௭. முதுகு -	மகம் -	புராரி -	திருவதிகை வீரட்டம்
௮. பின்தாரை -	பூரம் -	வைரவர் -	திருக்கண்டியூர் வீரட்டம்
௯. கொப்பூழ் -	அஸ்தம் -	ஞாயிறு -	திருவையாறு
௰. மேல்வயிறு -	சுவாதி -	திங்கள் -	திருப்பழனம்
௰க. நெஞ்சு -	அநுடம் -	செவ்வாய் -	திருச்சோற்றுத்துறை
௰உ. மார்பு -	கேட்டை -	புதன் -	திருவேதிகுடி
௰௩. குதம் -	மூலம் -	வியாழன் -	திருக்கண்டியூர்
௰௪. குய்யம் -	பூராடம் -	வெள்ளி -	திருப்பூந்துருத்தி

Koviloor Digital Library

உ

சிவமயம்

௰௫.	உதரம்	-	திருவோணம்	-	சனி	-	திருநெய்த்தானம்
௰௬.	மெய்	-	கார்த்திகை	-	ரவி	-	திருத்தில்லை
௰௭.	புயம்	-	மிருகசீரிடம்	-	மதி	-	திருஆலவாய்
௰௮.	அங்கை	-	புனர்பூசம்	-	சேய்	-	திருஅண்ணாமலை
௰௯.	விரல்	-	உத்தரம்	-	மால்	-	திருஆனைக்கா
௨௰.	கை	-	சித்திரை	-	பொன்	-	திருப்பெருந்துறை
௨௰௧.	தொடை	-	விசாகம்	-	கவி	-	திருவாரூர்
௨௰௨.	பாதம்	-	உத்திராடம்	-	காரி	-	திருப்புள்ளிருக்கு வேளூர்
௨௰௩.	மோவாய்	-	அவிட்டம்	-	ராகு	-	திருஇராமேச்சுரம்
௨௰௪.	விரல்	-	பூரட்டாதி	-	கேது	-	திருகேதீச்சுரம்
௨௰௫.	கபோலம்	-	சதயம்	-	சரம்	-	திருக்கடம்பர் கோயில்
௨௰௬.	குரல்வளை	-	உத்திரட்டாதி	-	திரம்	-	திருஐயடிகூர்மலை
௨௰௭.	கண்டம்	-	ரேவதி	-	உபயம்	-	திருஈங்கோய்மலை
௨௰௮.	மூக்கு	-		-	புதன்	-	
௨௰௯.	வாய்	-		-	செவ்வாய்	-	
௩௰.	கண்	-		-	வெள்ளி	-	
௩௰௧.	காது	-		-	வியாழன்	-	
௩௰௨.	கால்	-		-	சனி	-	
௩௰௩.	கடிதடம்	-	அபிஜித்	-			

Koviloor Digital Library

இவ்வாறு அண்ட வெளியிலும் நம் அகத்திலும் ஒருமைப்பாடு கொண்டுள்ளமையைக் காட்டவே சூக்குமலிங்க ஸ்தலங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்க.

மேலும் ஒரு உறுப்பு என்றால் ஒரு உறுப்பிற்கு ஏழு (எ) தாது செயல்பட வேண்டும். ((க) தோல் (உ) இரத்தம் (ங) சதை (ச) மூளை (ரு) நிணம் (கொழுப்பு) (சா) எலும்பு (எ) சுக்கிலம்) எனவே 32 (ஙயஉ) உறுப்பிற்கு 224 (உஉயச) புவனமாக செயல்படும் அகம். ஒரு உறுப்புக்கு நோய் 139 எனில் 32 உறுப்புக்கு 4448 ஆகும். இவ்வாறு நம் அகத்தை ஆராய்ந்து ஞானக் கண்ணால் தெளிந்து வரையறுத்து தந்திருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.

நமக்கு எழுத்தை அறிவித்தவன் இறைவன் ஆகும் என்பதை கற்றுத் தெளியாமல் ஞானியர்கள் ஆக்கித் தந்த அமிழ்தமாகிய தமிழ் எழுத்துக்களை மாற்ற இம் மானிடனுக்கு ஏது தகுதி என்பதை எண்ணிப் பாருங்கள். வாசியானது நம் அகத்தில் செயல்படும் போது அந்த ஒலி அலைகள் தொடும் ஸ்தானத்தில் இருந்து அதன் எல்லை வரை கண்டு ஆக்கிய ஏழு அத்துக்களைக் கொண்டது எழுத்து என்பதை உணராமல் இம்மானிடனுக்கு மாற்றுவதற்கு தகுதி ஏது ? இந்த (ளை, ணை, லை, ளை) எழுத்துக்களின் சூட்சமம் என்ன ? நம் வாசியானது மேல்நோக்கி நாவானது உள்நாக்கினருகில் மேல் புறத்தைத் தடவி பிரமர அந்திரமான சுழிமுனை வாயிலை நெருங்கும். ஆகவே இவற்றை மலை ஏறும் எழுத்தாகவும். கொம்பு ஊதி ஒலிக்கும் எழுத்தாகவும் இந்த எழுத்திற்காகவே உருவகமாக கொம்பை ஏற்படுத்தி அதை ஊதும் பொழுது ஒலிக்கும் நாதத்தை நமக்கு உணர்த்தி காட்டுகிறார்கள் ஞானியர்கள். சொல்லுகின்ற சொல் ஒலியும் அதைப் பயன்படுத்தும் செயல்பாடும் ஒன்றாக இருந்தால் தான் முழுப் பலன் கிடைக்கும். எழுத்தின் எல்லையின் ஆற்றல் அறிய வேண்டும். அந்த ஆற்றலை அறிந்தவர்கள் ஆக்கித் தந்ததை நாம் பயன்படுத்துவது தான் நமக்கும் நம் சந்ததியர்களுக்கும் நல்லது. இல்லையென்றால் அணைக்கட்டில் தண்ணீர் நிரம்பாது இதற்குமேல் கடுமையாக எழுத மனம் வரவில்லை. ஆதலால் சமூக கல்வியாளர்கள் என்றும் நிலைத்து இருக்கின்ற தமிழ் அமிழ்தமான எழுத்துக்களை பழையபடி நடைமுறைக்கு கொண்டு வருதல் முத்தமிழ் நாட்டிற்குச் சிறப்பு என்பதை சுட்டிக் காட்டுகின்றோம். தமிழ் என்றும் அமிழ்தம் தான். அது செம்மொழி. ஆட்சி மொழி

Koviloor Digital Library

என்று ஆகும் பொழுது கடுகளவு குறைபாடும் இருக்கக் கூடாது என்பதை மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். கலை என்றால் மூலத்தில் ஆரம்பித்து நாதாந்தம் வரை எட்டி எல்லையை அடைந்து ஆக்கும் செயல். இதை அந்தச் சொல்லில் ஒவ்வொரு எழுத்தின் எல்லையைக் கொண்டு உணர முடியும்.

'ண' என்ற எழுத்தின் முக்கியத்துவம் அகத்தியம் கூறும்

"டகரம் தழுவும் ணகார எழுத்து
சூரியன் சந்திரன் சுடர்என மூன்று
கலையுந் தோன்று நிலையக் குறியாய்
பிறைமுச் சுடர்ச்சுழி பெற்றுத் துவண்ட
மெல்லின வுருவம் விளங்க நிற்கும்."

"அண்ணு" என்ற சொல் உரிமைப்பாடோடு அரவணைக்கும் குறிப்பை உணர்த்தும். அதாவது உயிர் மெய்யுடன் ஒன்றி வாசியானது உட்சுழித்து நிலையாக நிற்கும். "அண்ணா" இதற்கு அந்த செயல்பாடு கிடையாது.

மேலும்,

"நீரில் நிலத்தில் நீர்நிலை யகத்துள்
அழுந்திச் சுழித்தும் அடுக்காய் முச்சுழி
ணகரம் படுசெயல் நடப்பிற் கொண்டு
நுண்ணிதின் அலைதலால் நுண்ணலை என்னத
தவளைக் குப்பெயர் சாற்றலின் ணகரத்
துருவந் தோன்றலால் ணகரந் திரிபில" என்பது அகத்தியம்

இது போல் ஒவ்வொரு எழுத்திற்கும் வடிவெழுத்தியற் விளக்கமும் கலாந்த விளக்கமும், கலாந்த வடிவெழுத்தியற் விளக்கமும் உண்டு அதை எம் ஞானத் தெளிவு குரு இயற்றிய அகத்தியம் இயம்பும். ஆகவே நம் முன்னோர்களாகிய ஞானியர்கள் ஆக்கித்தந்த எழுத்தை பின்பற்றினால் நாட்டிற்கு நல்லது. இதற்குமேல் கோடிட்டு காட்ட விரும்பவில்லை.

திருஆலவாயாகிய துவாதசாந்தத் தலமாகிய மதுரையில் சிவனாட்சி பொருந்திடவும் ஆவிற்குரியோனெனமேரு பர்வதவர்த்தினியாய்ப் பாவிக்க அம்மையுஞ் சேயாகி நின்றருள் பாலிப்பதன் தன்மையும் இந்நூல் விளக்குகிறது. ஏன் குன்று தோறாடல் என்பதையும் இந்நூல் விளக்குகிறது. அகம், அகப்புறம், புறம், புறப்புறம், என்ன என்பதையும் இந்நூல் சிறப்பாக விளக்குகிறது.

Koviloor Digital Library

ஆதியாய் அமைவுற்ற அண்டம் பிண்டம் சராசரம் எல்லாம் சமைவுற்ற ரூபம் இலிங்காகாரமே எனத் தெளிவாக இந்நூல் இயம்புகிறது. சாத்திரம் ஆறு என்பதற்கும் அகச்சமையம், புறச்சமையம் ஆறு என்பதற்கும் ஆருதாரத்தில் அகமாயும், புறமாயும், தோன்றி சமைந்தது தான் என்பதையும் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறுர் எம் ஞானத் தெளிவு குரு சித.வே. ஷண்முகநாதபிள்ளை அவர்கள்.

திருக்கோயில்களின் அமைப்பை இலிங்கபுராண உத்தரகாண்டம் பத்ம புராணம் முதல் தெளிவாக ஆக்கித் தந்திருக்கிறுர்கள். திருக்கோயில் வாசல் பதினென்று தான் என்றும், கொடி மரத்தின் விளக்கமும் மற்றும் அதன் அமைப்புக்களையும் இந்நூல் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளது.

நடைமுறையில் ஒரு மனிதனை அறிந்த மற்றெருரு மனிதன் பேசும் பொழுது உங்களுடைய பூர்வோத்தரம் தெரியாமல் பேசாதே என்று பழைமையைச் சுட்டிக் காட்டுதல் போல், எம் ஞானத் தெளிவு குரு இலிங்க புராணத்தின் பூர்வ காண்டம், உத்தர காண்டம் எழுதி முழு முதல் நூலாக்கி நமக்கு கருணையுடன் தந்திருக்கிறுர்கள்.

ஞானியர்கள் போற்றி வழிபடும் நாற்பத்து முக்கோண நடு ஆத்மலிங்க நாயகியாள் வாலைத் தாய் திருக்கோயில்களில் அமைந்த பாங்கை அறிவுறுத்துகிறுர்கள்.

தண்ணீர் வேண்டி எங்கெங்கோ அலையும் நேரத்தில் அதற்கும் நம் முன்னேர்கள் வழி காட்டியுள்ளார்கள். அதை நாம் கடைப்பிடித்தால் பலன் கிடைக்கும். சூக்குமலிங்கம் (உ௭) (27) இருபத்தேழிலும் ஓதுவார்கள் கொண்டு முறையாக மேகராகக் குறிஞ்சிப்பண் ஓதினுல் மழை பொழியும். மேலும் 270 ஸ்தலங்களுக்கும் ஓதுவார்கள். மேளம் முறையாக வழிபாடு நடத்தினுல் மாதம் மும்மாரி பொழியும். திருக்கோயில்கள் தான் நம் முன்னேர்கள் நமக்கு ஆக்கித் தந்த அருட்செல்வம். திருக்கோயில்களுக்குச் சென்று அருட் செல்வமாகிய சார்நித்தியம் பெற்று நம் சந்ததிகள் வாழ நாம் வாழ்ந்து காட்டி வாழ வேண்டும். கலியின் கொடுமை தீர இதுவே முழுமையான முதல் நூல் கூறும் உண்மை என அறிக. அவர் அவர் நட்சத்திரத்திற்கு உரிய திருக்கோயில்கள் சுட்டி காட்டப் பெற்றுள்ளன. அதற்குரிய பதிகங்களை ஓதுபர்கள் இம்மைப் பலனையும் பெற்று மறுமையில் விண்ணுட்சியும் எய்துவார்கள் என்பது திண்ணம்.

Koviloor Digital Library

இறைவனையே முழு முதல் துணையென நம்பி வாழும் தவசீலர் சிதம்பரம் செட்டியார் அவர்கள் அப்பெருந்தகையாரின் தவப்புதல்வனும், திரு. கரு. முத்தையாச் செட்டியார் அவர்கள் மருமகனும் ஆகிய டாக்டர் சிவநேசசெல்வர் சித. ஏகப்பன் செட்டியார் அவர்கள் எம் ஞானத் தெளிவு குருவின் நல் ஆசி பெற்றவர்கள். கனடாவில் வாழும் சிவநெறித்திருவாளர் ஏகப்பன் செட்டியார் அவர்கள் காட்சிக்கு மிகவும் எளிமையானவர். சிறந்த பண்பாளர். நம் தேவாரம், திருவாசகம், ஆகமம் இவற்றின் சிறப்புகளையும் அந்நூல்களில் பொதிந்த சிவரகசியங்களையும் பெரிய சபைகளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றி தமிழ் மணம் கமழச் செய்யும் வேள்வி வேந்தராகத் திகழ்கின்றார். அன்னாரின் பெருங்கருணையினால் இலிங்கபுராணம் உலக மக்கள் வாசித்து வாழ்வை வாழ்வாங்கு வாழ வழி காட்டியுள்ளார். இறையருளும் குருவருளும் இணைந்து இந்நூல் வெளியிடுவதற்கு அன்னாருக்கு நல்வாய்ப்பை நல்கி இருப்பதை எண்ணி எண்ணி என் உள்ளம் இனிமை அடைகிறது. அவர்தம் பொருளுதவியினால் பல நூல்கள் வெளி வந்துள்ளன. இலிங்க புராணம் நூல்ச் சிறப்பு அவரே நேரில் வந்து வெளியிடுவது என்பது முத்தமிழ் வேதத் திருச்சபையின் 27ஆம் ஆண்டு நிறைவு விழா இனிதே நடைபெறும் என்பதற்கு ஒரு முன்னோடியான குறிப்பு எல்லாம் வல்ல இறையருளாலும் குருவருளாலும் அவர்தம் பரம்பரை நீடூழி நல்வாழ்வு வாழ வாழ்த்தும் முத்தமிழ் வேதத் திருச்சபையார்.

முத்தமிழ் வேதத் திருச்சபையின் நூல்களை என்றும் நிலைத்திருக்கின்ற தமிழ் எழுத்துக்கள் கொண்டு சிறந்த முறையில் பொறுமையாக கணினி மூலம் இன்முகத்தோடு அச்சு ஆக்கித் தந்த ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ் குடும்பத்தார்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அவர்கள் பரம்பரை நீடூழி வாழ வாழ்த்தும் முத்தமிழ் வேதத் திருச்சபையார் குருவருளாலும் திருவருளாலும் எழுதிய முன்னுரையாகும். வரும் பிறவி தோறும் முத்தமிழ் வேதத் திருச்சபை தோற்றுவித்த எம் ஞானத் தெளிவு குருவின் அடிமையாக வாழ்ந்து முத்தமிழ் வேதத் திருச்சபைக்கே தொண்டு செய்ய இறையருள் கூட்டுவிக்க வேண்டும் என வேண்டிக் கொள்கிறோம். இந்நூலின் முன்னுரை குருநாதர் சமாதியில் ஆரம்பித்து திருக்கடம்பந்துறை ஐயடிகள்மலை, திருஈங்கோய்மலை, திருச்சிராப்பள்ளி மலைக்கோயில், திருஎறும்பீஸ்வரர் கோயில், திருவானைக்கா, திருநெடுங்களம் சென்று சுவாமி தரிசனம் செய்து

Koviloor Digital Library

வந்து பின் தொடர்ந்து எழுதி நிறைவாக காலையில் சிலம்பணி விநாயகர், மதியம் தி. பிள்ளையார் கோயில் ஸ்ரீ கைலாச விநாயகர், மாலை கலங்காதகண்ட விநாயகர் பேரருளால் வைகாசி 27ஆம் தேதி (9-6-2004) அன்று நிறைவு செய்கிறோம்.

இங்ஙனம்
இராம. ஆதிரெத்தினம்
இணைச் செயலாளர்
முத்தமிழ் வேதத் திருச்சபை
தேவகோட்டை

பொருளடக்கம்

(க) 1. இலிங்கபுராணம் காப்பு
(உ) 2. இலிங்க புராணம் வாழ்த்து
(ங) 3. அவையடக்கம்
(ச) 4. பாயிரம்
(ரு) 5. வாகீசர் தந்த மறைமுதல் நூல்
(சா) 6. இலிங்க புராணம் (விச்வலிங்கப் படலம்0
(எ) 7. அட்சயலிங்கப் படலம்
(அ) 8. திருப்பதிலிங்கப் படலம்
(கூ) 9. சித்தாந்தலிங்கப் படலம்
(ய) 10. சூக்குமலிங்கப் படலம்
(யக) 11. அதீதலிங்கப் படலம்
(யஉ) 12. பூரணலிங்கப் படலம்
(யங) 13. அமிர்தலிங்கப் படலம்
(யச) 14. இலம்பகம்
(யரு) 15. சோதிலிங்கப் படலம்
(யசா) 16. இலிங்க புராணம் உத்தர காண்டம் (பத்ம புராணம்)
(யஎ) 17. உரைநடைக் குறிப்பு
(யஅ) 18. நட்சத்திரங்களுக்குரிய திருக்கோயில்கள் அட்டவிணை

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

புராணங்கள் பதினெட்டனுள் முதலாவதாகிய இலிங்க புராணம்

காப்பு

சுக்கில அம்பிறைத் தாரிவரன் விட்டணு விவற்கும்
புக்குங்கறை சசிவண்ணம் தருதிருப் பூம்புவமௌத்
திக்கும் பரசின வவ்வித மோதியேத் திச்சருவ
விக்கினமுஞ் சாந்தி யாகுகவென்ன விளம்புவமே. (க)

நேராய தாறு நிரையா யடர்ந்து நெடுங்கவடீ
ரீராய்க் கிளைகள் பதிஞ றிரட்டித் திசைகொழிக்குஞ்
சீராய் நறுந்தண் நிழற்கீழ் மலர்ப்பூக்கள் சிந்தவென்றுந்
தோராய மாக விளையாடு வாலைதுணை யெமக்கே. (உ)

ஞானப்பூங் கொத்தி னறவுண் ணறுபத நாதமுந்தா
னுனவன் கண்ணழல் விந்து மனல்வாய்வதிற்கலையும்
சானவி தன்னிற் கலாதியைந் தாருஞ் சரவணத்திற்
கானற்பா லுண்ணுங் குழவியு மானேன் கழற்றுணையே. (ங)

தேவர்முனிவ ரிருடிகள் சித்தர்கள் தெக்கிணத்தின்
மேவகத் தீசர் சனகாதி நால்வர் விளங்குதிரு
வாவடுதண்டுறை சேர்திருமூல ரவரொடொத்தோர்
யாவருக்கும் போற்றிசெய்தேன் சரணமடித் துணையே. (ச)

வாழ்த்து

முத்தமிழ் நான்மறை யைந்தெழுத் தாரு முயர்சமயம்
சித்தர்கள் ஞானியர் பத்தர் அடியார் திருக்கூட்டமும்
சத்திய வேந்தன்செங் கோலுமெஞ் ஞான்றுந் தழைத்திடுக
உத்தம மாய்மாதமும்மாரி பெய்க வுலகெங்குமே. (ரு)

அவையடக்கம்

மட்டுப் படாத கலைவளர்ந் தோங்கு மவனியிதி
லெட்டு மிரண்டொன்று கண்டு வியாதற் கியைந்தபதி
னெட்டுப் புராணத்திலாதி புராண மிசைத்திடுதல்
கட்டுப் படாச் சித்துணர்வு கொண்டோனெனக் காட்டிடுமே. (சா)

Koviloor Digital Library

நூற்றெகைக் குறிப்பு

பாயிரம்

குருநாத ஞானமுருகன்ற ஞச்சிமேற்கொண்டு நலம்
பெருக வுலகிற்கு நாதாக்கள் தந்தபிரமவித்தை
தருநெறி நாளடைவிற் றடுமாற றவிர்க்கவெண்ணித்
திருமுறை நான்கிற் றசபுரா ணத்துட் செறிவுகண்டே (எ)

கண்டதி லுள்ளதை வாமன மென்னுங் கவினுரையாய்
விண்டதி லிங்க புராணமா மிந்நூல் விதியவனுட்
கொண்டதிஞ லாம்மறை தோன்று காலமுன் கூடிநின்ற
பண்டதிஞலே புராணமெனப்பேர் பகருவதே. (அ)

பகரும் பிரமத்தை விட்டணு வான பசுவுயிர்ப்பாய்
நிகழிரண் டாம்ஊஅழியூ ழியின்கண்ட நீர்க்கீழதாம்
உகம்கீர ஏதம்வரஞானம் பெற்றுதான் உய்யநந்தீ
புகலென்றணையயெய் யாதணையத்தந்து புல்லிடவே. (கூ)

புல்லுண் டதனுன்மன் வந்தரம் மன்வாதி போயொழிய
இல்லென் றதுவில் லிலிங்காம் இலிங்க மெனவதனின்
எல்லையிற் றூனணு வாம்தாணு வாகி இசைந்து நின்ற
தொல்லையாங் காலத்தில் லிங்கம் புராணமாய்த் தோன்றியதே (ய)

தோன்றும் பிறப்பே முடையொன்றும் எட்டாய்த் துலங்கி நிற்கும்
ஆன்மாவிற் கந்தாதி யாகப் பதிநிற் பதினியலிற்.
றூன்பதி னெட்டெனப் பத்தினுளெட்டுச் சமைந்திடுங்கோ
மான்முட்டுப் பாடு தவிர்க்கு முகாதிமன் வந்தரத்தே (யக)

உகமன்னு வந்தரங் கள்பதினெட்டும் பத்துள்ளடங்குந்
தகவா லிலிங்க புராணத்திற் பத்மமுஞ் சார்வுகொள்ளப்
புகன்ற வதனில் நிரவொலி வெள்ளம் புகுந்து மண்டி
யகல்வான முடலே விச்வலிங்காகார மாயதுவே. (யஉ)

ஆயதன் பின்னர் நிலநின்று தம்பமதுவலது
வேயட் சயலிங்க மாம்பர மோர்தெய்வ மெய்தலது
தேயமெனச் சொல்லிலிங்க மிது வொப் பதில்லையென
ஆயல்சித் தாந்தமுஞ் சூக்மா திதம்பூ ரணலிங்கமே. (யஙு)

Koviloor Digital Library

லிங்கத் திருபாலு நின்று பணிய வெதிர் நிற்கையில்
அங்கா கமமுறை யாய்ப்பணி யாதுவே தாவொடுமால்
எங்கோ எதிர்மறை யாய்த்தேடத் தேடிடவெட்டரிதாய்
இங்குற் றமிர்தவிலிங் கமுமாஞ்சோதி யீசனென்றே. (௰௪)

என்றுவா கீசரியம் பியதைவிச்வ லிங்கமுதற்
றென்று பதுசோதி லிங்கமீ ருகத் தொகுத்துரைத்தோம்
என்று முலகநடைமுறை யில்லிஃ திருந்திடினும்
ஒன்று மறியா திருந்ததை யிந்தநூ லோதிடுமே. (௰௫)

ஓதி யுணர வுலகூழ்க் குறிப்பு மொரு முதலாம்
ஆதி வடிவமும் சீவன் சிவமர் யமைவுபெறச்
சாதிக்கும் மார்க்கச் சரியாதி நான்கின்றனிச்சிறப்பும்
போதிக்குங் கற்சித்தப் போதிப்பியலும் புலப்படுமே. (௰௬)

புலப்படா வாதன் வியாதனுய்க் கண்ட புராணமதை
யலகிட்டு வல்விலங் கஞ்சிடு நேமிசா ரரணியர்
பலருக்குஞ் சூதாய் முனிமானிடர் போற் பகர்ந்துளதை
யுலகின் மரபுவழுவா முறைமையி னேதுவமே. (௰௭)

திருச்சிற்றம்பலம்

(வாகீசர் தந்த மறைமுதல் நூல்)

நிரவொலி வெள்ள மண்டி நெடுவண்டமுட
நிலனின்று தம்ப மதுவப்
பரமொரு தெய்வ மெய்தவிது வொப்பதில்லை
இருபாலு நின்று பணியப்
பிரமனு மாலுமேலை முடியோடு பாதம்
அறியாமை நின்ற பெரியோன்
பரமுத லாயதேவர் சிவனுய மூர்த்தி
யவனு நமக்கொர் சரணே. (௰௮)

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

இலிங்க புராணம்

சிவாய நமவென்று நால்வ ரரனுர் திருவடிசார்ந்
துவாய மாய்க்கற்ற மறையாங் கலைஞான வுண்மையெலாந்
தவாதொரு நூலாக் கியதற் கிலக்கணஞ் சாற்றுதற்குத்
துவாதசாந் தத்தல நாதன் நமக்குத் துணைநிற்குமே. (க)

துணைநிற் ககத்தியச் சங்கேத சூக்கத் தொடரினுக்கோ
ரிணையா யகப்புற மோடுபுறமு மிணைப்புறமா
யணையு நிலையிற் கலையறு பத்துநா லாயடங்கத்
துணையி னிலக்கண மும்வரம் பாதியுஞ் சொல்லுதுமே. (உ)

சொல்லி லடங்கா வநுபூதி ஞானந் துலங்குகலை
எல்லை யறுபத்து நாலு மிருபதி னேழொடைந்தாய்
வல்ல வகப்புற மாம்அப் புறப்புற வானகத்துந்
தொல்லை நாண் மீன்பஞ்ச கோளுமவ் வாருய்த் துலங்கிடுமே.
(ங)

இணைப்புறம் - புறப்புறம்

பூர்வ காண்டம்
விச்வ லிங்கப் படலம்

துலங்குகோள் நாலொன்றும் வேதவே தாந்தமாய்த் தோன்றி நிற்க
இலங்கி ரவிமதி யொன்றிரு பத்தெட் டெனுங்கலைகள்
வலங்கொளா ருதாரமும் மண்டலத்தினு மாகமிக்க
நலங் கொளிரு நூற்ளெ டைம்பத் திரண்டாய் ஞானந்தருமே.
(ச)

ஞானந் தருஞ்சரி யைகிரி யையோக நாலொ டொன்ற
வான நிலையிது வாயிரத் தெட்டாஞ்சி வாலயமாய்
மோனந் தருநல் லிலிங்கா கரமா முகூர்த்தமுமா
யானந்த மான சிவாகம மொன்பா னமைந்திடுமே. (ரு)

அமையு மிருபத்தொ ராயிரத் தாறுநூ ருமளவி
லமைந்தபூ மண்டலக் கோளகை விச்வலிங் காகரமா
யமையவத் தூலத் திலிங்க மொவ்வொன்றுமே யாயிரத்தெட்
டமையக் கரவுரு வாகிஞா னுனந்தமாய் நிற்குமே. (சா)

Koviloor Digital Library

அட்சயலிங்கப் படலம்

நிற்குஞ் செகநாத லிங்க மபிஜித் திரயைதருமீ
னிற்கொத் திருபதி னெட்டா யமைய விதிலிரட்டி
பெற்றைம்பத் தாருகத் தேயம் விளக்கம் பெறவிவற்றைப்
பற்றி நவகண்ட ராசி நிலையாம் பதம் பெறுமே. (எ)

பதம்பெறச் செய்யருணசல மேடப் பகுதியதவ்
விதமேமண் ணறிலங் கைதனுக் கோடி விருட்சிகமா
மிதனிடை யுள்ளநிலப் பரப்புக் கடலெல்லையதுச்
சிதமான செவ்வாயின் கண்டமதாகச் செயந்தருமே. (அ)

செயந்தரு மஞ்சைக் களநல் லிடபமாந் தென்குமரி
நயந்த முனைது லாஞ்சுக் கிரகண்டமா நற்பவளத்
துயர்தீ வுகளாழ் திரையிழியாத் தீபமுந் தனுசு
தயமலை யத்தீவு மீனங் குரு கண்டஞ் சார்வகமே. (கூ)

அகத்ய னெலியலாற் ருன்சைய மாய்மற் றவைசைலமாய்ச்
சகத்துற் றவோங்கற் பகுதி மிதுனஞ் சமுத்திரத்தென்
னகத்தின் பரப்பிடங் கன்னி புதன்கண் டமாயமையும்
மகத்தாம் மலைக்கு வட நாடிந்தின் கண்டமண்டலமே. (ய)

மண்டலத் தோங்கு வடமேரு மற்று மதன்பகுதி
கொண்ட நிலப்பரப் பெல்லையுஞ் சிம்மமாங் கோளரியின்
கண்ட மிஃதற் பேரிருளிருக்கை கொண்டு காணநிலம்
விண்ட மகரம் சனிகண்ட மாக விளங்கிடுமே. (யக)

விளங்கு கபிலா ரணியம் அமைய விருந்திடுபா
தளங்கொண் டதுகும்ப ராசி இராகுகே தாளுகண்டம்
களங்கற விவ்வா றகில மிராசி கோள் கண்டமதாய்
விளங் கக்கா லத்தேச வர்த்தமா னுதிகள் மேவிடுமே. (யஉ)

மேவிடு காலமுன் சொல்லிய தான விசுவலிங்கம்
தாவித மில்லாச் சுயம்பைம்பத் தாறுதே சாதிலிங்கம்
சேவிக்க வத்தக மானவான் மாலிங்க சேகரமாய்ப்
பாவிக்க வெங்கும் நிறைந்து சிவசாரூபந் தருமே. (யங)

சிவசா ரூபந்தர நின்ற விவற்றுட சிறப்புடைத்தத்
துவமா மிரவி மதியுச்சம் பெற்றுத் துலங்கிடச்சே
யவனுட் சிச்சாரமுந் தீரமுபய மதுபொருந்தி
எவற்றையுஞ் சித்தாகத் தம்மு ளடக்கு மியைவு கொண்டே.(யச)

Koviloor Digital Library

தம்மு ளடக்கு மியல்புகொள் சித்தாந் தமிழ் விளங்க
அம்மையு மப்பனுக் கிரவீரனுக்குவந் தாட்சிதந்த
செம்மை யுடையதுஞ் சூரியன் சந்திரன் தீய்நளிரும்
கம்மை யுடைத்தாய்ச் செழியனு கக்காட்சி கண்டதுமே. (௧௫)

கண்டகண் டங்களிற் கோளிலி ராசி கணணமதிற்
பண்டை யியனெடி தாகையாற் பாண்டியன் பாரெனும் பேர்
கொண்ட தமிழகஞ் சித்தா யனைத்துங் குறுகிநிற்கத்
தண்டாச் சிற்ப்புடைச் சூக்கும மாகச் சமைவுறுமே. (௧௬)

சமைவுற்ற தூலாங் குலந்தொண்ணூற் ருறதைச் சார்வு கொண்டாங்
கமைவுற்ற காரண தேகமுப் பத்திரண் டங்குலமாம்
கமைகொண் டசூக்குமம் பன்னிரண்டங் குலங் காண நின்றெற்
றுமையா யனைத்தையும் உள்ளாக்கி யுள்ளாகி யூக்கிடுமே.(௧௭)

ஊக்கவுட் கண்டது போல வெளியினு மொத்தமைந்த
தாக்கக் கலைகண்டவர்க ளறிவா ரறிந்து ரைத்தோம்
நோக்கக் கண் கூடா யிருகதிர் சேய் சுங்க னென்டொன்று
நீக்க மிலாத போற்பூ மண்டலத்தும் நிலைபெற்றதே. (௧௮)

நிலைபெற்ற தென்னிலங்கை வடமேரு நிலப்பரப்பி
வலைகடல் சூழெல்லை புண்ணிய பாரத மானதற்காம்
கலை வழக் கீது சிரமக மேருவாங் காரணத்தால்
தலைநில மீது கபிலா ரணியம் பாதாளமதே. (௧௯)

பாதாள மேரு வரையோ ருருவான பார்த்திபமே
யாதார விச்சு லிங்கஞ் சிவாலய மாயிரத் தெட்
டிதா மிதலைம்பத்தாறு தேசாதி இலிங்க வெற்பும்
வாதாட வீழ்பொன் மலைக்கோடும் அட்சய மாலிங்கமே. (௨௰)

திருப்பதி லிங்கப் படலம்

அட்சய லிங்க மிராசி மீன்கோள் கண்டம் ஆறும் எட்டோ
டொட்ட நூற்றெட்டுத் திருப்பதி யாமீ தொருவர்பெறு
திட்டிப் பிலாவெற்பு யாறிடமாய் மூர்த்தி தீர்த்தந்தலத்
தட்ட மூர்த்தங்கொள் ளலினுற் றிருப்பதி யாயினவே. (௨௧)

Koviloor Digital Library

சிவமயம்

சித்தாந்த லிங்கப்படலம்

ஆயின தூலத்தின் அங்கஅணி யெச்சமாயகற்றி
யாயின பின்கா ரணங்கா ரணஅணி யாமெச்சமாய்ப்
போயின கண்டு பிராணுயா மங்கூடு பொற்பதொப்ப
ஏயின மாஞ் சூக்குமந் தமிழ் நாட்டிலிசைந் திடுமே. (உ௰உ)

இசைந்த நால் வேதவே தாந்தம் வடபுலத்திற் றலமா
யசைந்து பரவிக் கொளுமைந்தாய் நிற்கவகத்தியன்றென்
றிசையினி லாகம சித்தாந்த மாகச் செறிவு கொண்டாங்
கசையா திருபத்தே ழொன் ருய்த் தலங்கள மைந்தனவே.(உ௰௩)

அமையு மொவ்வொன்றுட்ட சவாயு கும்பித்த டங்குமது
தமையொத் திருநூற் றெழுபதும் முன்சொல் தலங்களைந்தும்
சமைந்து பொதுமறை தன்னிற் சிறந்த தமிழ்மறையோ
டிமையோ ரிருடிமுனி சித்தர் போற்ற விலங்கிடுமே. (உ௰௪)

இலங்கு மிருநூற் றெழுபதினுள்ளைந் தியைவு கொண்டு
துலங்குறு மூர்த்தி கரநட ராஜர் சொரூப மதாய்ப்
புலன்கொள் கருவியின் வேதவே தாந்த மாய்ப்புக் கழுந்துந்
தலமான மூலவா தார நிலையாந் தகவிதுவே. (உ௰௫)

தகவான கோள்மூன்றிராசி வழிபோந்து சஞ்சரிக்கும்
புகலிட முத்தமிழ் நாட்டினி லுள்ளதாற் பூ மனவ
னகலிட மீதால் முருக வேளிங்கு வந்தாட்சி கொண்டிச்
சகத்திற் கலியின் கொடுமை கெடவருள் தந்திடுமே. (உ௰௬)

அருள்தந் திவ்வாறு தமக்கே யுரிமையா யாட்சி கொண்டின்
டிருந்தகி லத்திற் கிறையவனக விமையவுறலாற்
றிருந்தெத் தலத்தரும் வந்து தரிசனம் செய்தருளிற்
பொருந்தத் திருக்கோயிலெங் கெங்குமாகப் பொலிவுறுமே. (உ௰௭)

சூக்கும லிங்கப் படலம்

பொலிவா மிருநூற் றெழுப தடங்கலும் பூரிதமா
தலின்ற் சிறந்தவை வீரட்டத் தோடேழு தானமிருள்
வலியாதிபர் நிலமொன்பான் சந்தித் தான மாகிநின்று
கலிதீர்க்கு மூன்றே டிருபத்தே ழாகக் கதிதருமே. (உ௰௮)

கதித்தெழு தெக்கனுங் காலன் சலந்தரன் கண்ணறுவோன்
மதிக்குடைக் காமன் கயன்முப் புராதிகள் மால்மகனோர்

Koviloor Digital Library

அதிர்த்திட வீரன் மிருத்செயன் நேமி கலாயுதன்றெற்
றெதிர் மேதை கைச்சினன் நக்கன் வடுகனி கலுவரே. (உ௰௯)

இகல வீறட்டவீ ரட்டம் பறியல் எழிற் கடவூர்
அகல்விற் குடிகோவ லூருங் கொறுக்கை யடற்பழுவூர்
மிகவாந் திருவ திகைகண்டியூ ரெட்டு மேதினியிற்
றகவாம் புரியட்ட மாக வெளியிற் சமைந் தனவே. (௩௰)

சமைந்ததிவ் வாருக அண்டவெளியிற் றபனனுச்ச
மமைந்த விராசி முதற் சிம்ம மீருய வைந்திடத்துங்
கமைமீன் பரணியு ரோகணியாதிரை காற்குளமீ
னமையா யிலிய மகம்பூர மெட்டு மமர்ந்திடுமே. (௩௰௧)

அமராச் சுடராதி பத்தியங் கொண்டுள்ள வைம்முகத்திற்
றமராகச் சேய்சுன் கவிமால் தமனியன் சந்திரனும்
கமல பதிலக் கினுதிப ரெண்மர்க ளாய்முழுமீன்
நிமல ருறுவதைக் காண்க வடுக்காய் நிரநிறையே. (௩௰௨)

நிறைமுழு மீன்கன்னி யாதியாய்ப் புல்வாய் நிலைமுடிய
வுறைவன வத்தம் சுவாதி யநுட முதாசினனு
யறைகின்ற கேட்டைமு லம்முற் குளம் ஓணம் ஆதியன
முறையேசத் தத்தான மாகும் வாராதிபர் முற்படவே. (௩௰௩)

முற்பட்ட வானி லமைந்தவவ் வாறே முதிர்நிலத்தும்
வெற்றமை யாறு பழனஞ் சோற்றுத் துறை வேதிகுடி
நற்கண் டியூர்பூந் துருத்திநெய்த் தானமாய் ஞானநலம்
பெற்றுே ரகத்துணர் சத்தத் தானம் போற் பிறங்கிடுமே. (௩௰௪)

பிறங்குமா ருதார மண்டல மூன்றிற் பிறழ்நவமாய்ச்
சிறந்தோர் நவநா யகர்களவ் வாரு சினியிடத்துப்
பிறந்தெரி தோன்று நாள்மும்மீன் கழைசனி பின்பிடி நூன்
அறந்தவி ராநாள் முறம்ஆடி புள்ளும் பூரட்டாதியே. (௩௰௫)

ஆதிமுத னடுவீரு யணைத்தினும் ஆமிவற்றுட்
சோதி ரவிமதி சேய்மால் பொன்னன் கவிசூனி ருபாம்
பாதியா மொன்பது கோளாகியவா றகிலமதன்
மீதினும் நற்றவம் மூர்த்திக ளொன்பான் விளங்கிடுமே. (௩௰௬)

விளங்கு மிரவி புலியூர் மதிகூடல் வீரியச் சேய்
களங்கறு சோதி மலைமால் திருவானைக் காகனகன்

Koviloor Digital Library

அளப்பில் துறை கவி யாரூர் சனிநற் சடாயுபுரி
இளம்பாம் பிரண்டி ராமேச்சுரம் கேதின தீச்சுரமே. (௩௰எ)

ஈச்சுரத் தானம் பிறழும் நவமா யியங்க லொன்றே
யாய்ச்சமை சந்தித் தலமகத் திற்கண்டவாம் படியே
மீச்சகத்திற் சதயம் முத்திரட்டாதி மின்னிரவி
யாய்ச்சொல் முழுமீன்கள் மூன்றுஞ் சந்தித் தானமாயதுவே. (௩௰அ)

ஆயதிரு கோள்கள் அந்தியுஞ் சந்திமுன்னுய் ரவியொ
டேயது போல வமைமீன ராசியினி லிருமீன்
தோயவு நீர்கிழ தாக வொரு மீன் றுலங்கிடுமு
பாய முணர்ந்திடச் சொல்லிய வுண்மை யறிவுறுமே. (௩௰௯)

அறிவுறு மவ்வாறு காலமா லமத்தி யானமதில்
நெறியே தரிசனஞ் செய்து ய்யுமா றிறை நின்றதலம்
குறிக்கக் கடம்பன்று றையீங் கோய் ஐயடி கூர்மலையும்
பிறிதின்றி யொன் ருய சந்தித் தலமான பேர் பெறுமே. (௪௰)

பேர்பெற்ற நாதாக்கள் ஞானு நுபூதி பெறும் விளைவில்
நேர்சரியாக வியையுஞ் சரியையயாய் நின்றதிதைத்
தேர்ந்து தெளியுமறை நூல் சிவாகம சித்தாந்தமும்
பார்மீது ளோரெலாம் நாளும் பயின்று பதம்பெறவே. (௪௰௧)

பதம்பெற நின்ற வீரட்டமோ டேழுபதி நவக்கோள்
சுதந்தரத் தான மோர் சந்தித் தலமாய்த் துலங்குதற்காம்
விதந்தேர் கிரியை முழுநீற ணுட்டான மேன்மை பெறற்
சதமான காயத்திரி சந்தியா வந்தன மிவையே. (௪௰௨)

அதீத லிங்கப்படலம்

இவைபோற் குளத்திலொளி வட்டங் கண்டாங் கிதனிடையிற்
செவையாக மேவுருத்தான மருவிதெளிதளியில்
நவைதீரப் புட்கரம் வாரிதி யாக்கிடு ஞானவிய
லவைபோற் கிரியையிற் றற்பணஞ் செய்யலமை வுற்றதே. (௪௰௩)

உற்ற விஷு வயணஞ் ஷடசீதி யுவாப்படு நாள்
பெற்றமன் வாதி யுகாதி களிற்குளம் பேரருவி
மற்றும் நதிகடல் மீதிற் சதுரா மதீதலிங்கம்
சிற்றுரு வாக்கல் சரியைபா வாக்கியஞ் செப்பலதே. (௪௰௪)

Koviloor Digital Library

செப்புமக மொன்றகப்புற மொன்றென் றிதிற்புறமுன்
றப்புறம் நான்கா யகத்துற்ற போற் சொன்னதினமைந்த
தொப்புறத்தேவர் முனிரிஷி சித்தர் மனுவரசு
மொப்புற்ற தந்தை தாய் ஆசானகதியு மூர்த்திகளே. (சுரு)

மூர்த்திக ளாளுமிலிங்கஞ் சிலைகாழ் முழுமுதனூல்
கூர்த்திடு வாணலிங்கம் மணல்பொன் செம்பு கோமளங்கொம்
பார்த்திடு மொன்பான் வகையா கியவிவ் வதீதலிங்க
மூர்த்திக ளாகம மஃது மொன் பானுய் முடிந்திடுமே. (சுசு)

மேன்மகு டஞ்சுப் பிரங்கால வுத்ரம் வியாமளமா
வான்சிந்தம் வீரமுங் காரணங் காமிகம் வாதுளமொன்
பான்றேவ ராதியாய் வானகத்துற்ற படியுரைத்தோம்
மான்னுடர் ஆதியாய் ஆகமம் மூலர் வகுத்தனரே. (சுஎ)

பூரணலிங்கப் படலம்

வகுத்த வொன்பானிற் சிலைமா மணிபவ் வளமதொன்று
மிகுத்த படிகமும் நீறு சலமொன்று மேலவனூல்
தகுசா தனம்பில்வ மொன்று கவுணியம் தாய்வளம்நெய்த்
தொகுதிய தொன்று மணலும் மெழு கொடு சூதமொன்றே.(சுஅ)

சூதமொன் றும்பறிகொன்றை கனலொன்றுதுப் பரம
தீதமொன் றுஞ் செங்கல் அன்னமரிசி செறிந்ததொன்று
வேதமொன்றுங் கல்லு முத்துபூங்கொம் பொன்று மீறு கொம்பும்
போதொன்று மொன்று மூன்றென்பான் வகைலிங்கபூ ரணமே.
(சுகூ)

பூரணபூரித மாக வமிதம் பொழிதரு நற்
றுரணை நேராஞ் சரியை யிதுவாந் தகுங்கிரியை
பூரண கும்ப மமையும் பொலிவு புரிமங்கலம்
ஆரண லிங்கநா லேழ்நம் பொதுவா மவணியிதோ. (ருய)

அமிர்தலிங்கப்படலம்

அவணியின் முத்துநெல்வேலி மாணிக்கமஃ தாடாணையாம்
பவள நல்லூர் தொத்து பூவணங் கொம்பாப் பனுருசிலை
குவடுயர் கேதார நீறும யானநற் கோமளமோ
துவளுறு கோகர்ணம் ஆகமம் ஏடகத் தொல்பதியே. (ருக)

Koviloor Digital Library

பதியுரு வன்னம் பெருந்துறை தண்டுலப்பார் குடமுக்
கதிவித சாதனம் ஆலவாய் பூப்பூவனூர் மணல்நற்
கதிதரு காஞ்சி தயிர்சிக்கல் நெய்நெய் கமழ்நிலைபாற
பதிகரு வூர்தேன் மெழுகுசிற் றேமம் பயில் நிலமே. (௫௰௨)

நிலவிய செம்பிரா மேச்சுரத்திற் காசி லிங்கமதாம்
குலவனல் அண்ணா மலைசூதம் வெள்ளியங்குன்ற மொளிர்
சலந்திரு வூறல் செங்கல்லணி சோணசைலம் விலுவப்
பலமது வைகா சுவணங்கா னப்பேர் படிமிசையே. (௫௰௩)

படிகமுக் கீச்சுரம் வாழ்நல்லிலிங்கம் பவமகலும்
படிராமர் பூசித்த ராமேச்சுரமாம் பதிதுலங்கும்
படிமூல ராகமங் கண்டு ஞான நுபவமுணர்ந்தப்
படியே இலிங்க புராணமா மிந்நூல் பகர்ந்தனமே. (௫௰௪)

பகர்ந்தோம் அனைத்தும் நிரல்நிரையாகப் படிப்படியாய்
பகர்ந்ததிற் செம்புசெங் கல்லாரியன் பிதுர்ப்பாங் கொருங்காய்ப்
பகர்ந்ததால் நாலேழி லிங்கமும் ஆகமப் பண்புபெறும்
பகர்ந்த வவை திரிகோண நாண் மீனினப் பாங்குற்றதே.(௫௰௫)

இலம்பகம்

உற்ற வெளியிற் சுழன்று தடமொன்றி லோங்குநடம்
பற்றிப் பிறழ்நவா காரந் துலங்கப் படரொளியை
முற்றிலு மொத்துச் சிவமயமாக முதிர்நிலத்தில்
வெற்றிடத் தோங்கல் முதலன வொன்பது மேவிடுமே. (௫௰௬)

மேவிலசைந் தசையா தொன்றி லயங்கொள் வெள்ளிவெற்பு
பூவிற் குரியோ னெனச் சிவனுட்சி பொருந்திடவு
வாவிற் குரியோ னெனமேரு பர்வத வர்த்தனியாய்ப்
பாவிக்க வம்மையுஞ் சேயாகி நின்றருள் பாலிக்குமே. (௫௰௭)

பாலிக்குஞ் சேயெனக் குன்று தோருடல் பயின்றிடநின்
ருலிக்குந் தானமா மட்சய லிங்க மறிஞனென
மாலிடங் கொள்ளத் திருப்பதி லிங்க மமையமறை
நூலின னென்னச் சித்தாந்த லிங்கந் தோன்று நோக்குகவே.
(௫௰௮)

Koviloor Digital Library

நோக்கிற்சா காத்திரங் கொண்டோர் களென்ன நுவலவருஞ்
சூக்குமலிங்கத் துலங்கும் அதீதமாய்ச் சொல்லி லிங்கம்
மேக்கோள் தருமனதிபதி யாக விளங்கி நிற்கும்
ஆக்கையங் கோள் மூவிலிங் கமாஞ் சூலியதிபதியே. (ருமகூ)

அதிபதி யான தலைக்கோள் படமாட வாற்கணித
விதிசெய் வோனுக வமிர்தலிங்காகார மேய் நடனப்
பதிவாழுங் கோவிலாம் ஈதா யிரத்தெட்டுப் பத்மதளத்
துதித்தெழுந் தெய்விகக் காட்சியை யொத்தமை வுற்றிடுமே.(சாய)

சோதிலிங்கப் படலம்

அமைவுற்ற வண்டமும் பிண்டஞ் சராசர மாதியெலாஞ்
சமைவுற்ற ரூபமிலிங்கா கரமே தனித்தனிவேற்
றுமையுற் றதிலொற் றுமையாய பூதவு ருவுமறை
தமையுற்ற தற்றதாய்க் கண்டத னோடு சகலமதே. (சாயக)

சகலமா மாருதா ரத்தி னகம்புறஞ் சார்ந்து நின்றுங்
கிகலு மியல்பாஞ் சமையமீ ராறு மிமையமுத
லகல்நிலத் திற்சேதீ ருக வமைகண்ட மஃதனைத்தும்
திகழு முருவ மிலிங்கம தாகவே செய்தனரே. (சாயஉ)

செய்ய கணபதி யுஞ்சேனை மாகாளத் தெய்வலிங்கம்
வைரவர் காசிவிசுவேச லிங்கமகமேருவிற்
றெய்வக் கணக்கனற் கேதாரலிங்கமாம் சிம்புளுரு
வைய னருமதை யோங்காரலிங்க மவனியினே. (சாயங)

சோதிலிங்கப் படலம்

அவனியிற் செவ்வேள்சீ பர்ப்பத மல்லிகல் ஆம் மருதுச்
சிவ லிங்கஞ் சாத்தாவிற் குத்தா ருகவனத் தீசலிங்கம்
இவர்கட்குக் காணுதி பத்தியம் வைரவம் என்றூழ் மதம்
நுவல்பா சுபதங்கொள மாரஞ் சாக்தம் மதநோக்குகவே. (சாயச)

நோக்குஞ் சரியை கிரியையும் முத்திரா னுட்டானமும்
தீக்கணி யெச்சமும் ஞானமும் நற்சாந்தி யோடுதவம்
சூக்கும மான சிவயோக சாதனஞ் சொல்லிரு மூன்
றுக்கும் அகச்சமயஞ் சாத்திர லிங்கமா மிவையே. (சாயரு)

Koviloor Digital Library

இவைபோற் புறந்திக்குப் பாலகர் சௌராட்டிரம் வழங்கு
புவன மதிற்சோம நாதலிங் கம்மண் பொதுப்பிதுர் நீள்
சிவலயத் திற்குச்ச மேசமால் தேவையிற் சேதிலிங்கம்
பவன வுருத்திரன் கோதை திரியம் பகமதுவே. (சாயசா)

அதுவிதாம் மாயை சிதாபுரம் வைத்திய நாதலிங்கம்
பொதுவாம் அறந்தக் கினிபீம சங்கரப்·போற்றி லிங்கம்
இதுவுல காயதம் பௌத்தம் அருகதம் மீமாம்சமும்
சதுராம் சமண்பஞ்ச ராத்ரம் புறமாம் சமயமிதே. (சாயஎ)

சமயநூல் சோதிடம் வேதமியாகம் தகுநியதி
யமைவாம் வயித்தியம் மந்த்ரம் புறச்சமையம் பொருந்தொற்
றுமையாந் தொடரிவை எல்லாமி லிங்க வுருவமதி
லமைந்தன காண்க வகம்புற மொன்றிரண் டல்லது ண்டோ.
(சாயஅ)

உண்டான துண்டாவ துள்ள சமயங்க ளொக்கு மிதின்
விண்ட தனுண்மை யறிந்தாற் சமயவெறுப் புணர்ச்சி
யண்டா தநுபூதி சாதனஞ் சித்திக்க வாறு தலங்
கண்டதில் மாருதம் பன்னிரண் டான கணக்கறிந்தே. (சாயகூ)

அறிவிற் கறிவை யறிவிக்க மாருத மஃதொடுங்கிக்
குறியது வான குறியாய் மருதுங் குறித்த செயல்
நெறியாற் சுவாதியுந் தோன்றுமவ் வாறே நெடுவிசும்பில்
செறியுநாண் மீனயு நோக்க வுணரலாந் தீர்க்கமொடே. (எய)

தீர்க்கதரிசனச் சோதிலிங்கப் பெயர்செப்பலுற்ற
மார்க்கமிது சோம சூரியனு ராலவாய் புலியூர்
ஏர்க்க விதனிடைத் தீயா மிடைமரு தீசலிங்கம்
பார்க்க மகாலிங்கஞ் சோதிலிங்கங்கள் பனிரெண்டினே.(எயக)

இலிங்க புராணம் – உத்தரகாண்டம்

பத்ம புராணம்

பனிரெண்டாய் நின்ற சமயத்தங் கங்கே பலவுருவாம்
தனிமுத லொன்றே யகம்புற மாமிரு சார்பதிலும்
இனிய வரியோ டரனெனச் சொல்லு மிரண்டு ருவாய்
அனியாய மாயையும் ஞானமுமாய் நின்றடர்த்திடுமே. (எயஉ)

Koviloor Digital Library

அடர்ந்தமன் வாதிமன் வந்தரம் ஊழிகளாய் விளங்கிப்
படர்ந்திடுங் காலங்க ளொன்றும் படைக்கப் படாநிலையிற்
சுடராய வாதி புராண னநுதியாந் தோற்றத்தினும்
கடவ வுள்ளாய் நிற்கி லிங்கத்திற் பத்மங்கடைப்படுமே. (எ௱௩)

கடைப்படு பத்மத் தொடொன்றப் பொய் தோன்றிய காரணத்தால்
றடைப்பட்டப் பூபூசைக் காகாது தாழுந் தனிமலராய்
இடைப்பட்ட வாலயங் கொள்ளாக் குசைப் புல்ல னென்ன
மண்ணைப்
படைப் பவனிற்கக் குசைசயத்தான் மால்பரவிடுமே. (எ௱௪)

பரவுநற் பூசரி யாகவோர் கண்ணைப் பதம்புதைவு
தரச் சேர்த்ததனுற் சுதரிசனம் பெறு தன்மையனுய்
அரவிடை வைகாநே யம்புள் ளுறை பஞ்சரத்திரமும்
நிரந்தரந் தீர்க்கையாய்ச் சாயுச்சியத் தினிலை பெறுமே. (எ௱௫)

நிலைபெற்ற மெய்ஞ்ஞான சாதனக் காட்சி நிகழ்ச்சியதைக்
கலைகளாய்த் தந்ததனேடமையாது நற்கற்சிதமாம்
சிலையுருவாய்ச் சித்தஞ் செய்ய வஃதாலயச்சிற் பமதாய்த்
தலைசிறந் தோங்கித் தருமென்றும் ஞானதரிசனமே. (எ௱௬)

தரிசித் தாருதார மும்மண்டலத்துற்ற சக்கரத்தை
வரிசைப் படுத்தநாற் பத்துமுன்றேழா வரணமதிற்
றெருவாற தாகச் சமையச் சமையம தீராறதாய்
மருவி யகம்புற மானவா ருலய மாக்கினரே. (எ௱௭)

ஆக்க வெளியாம் அருவும் வளியாம் அருவுருவும்
திக்கு முருவான தீயும் சலமாம் தெளியகளம்
மேக்கொண்டொன் ருகிச் சகளீகரித்து விளங்குநில
யாக்கொண் டதுவே நிலத்திற் சிலாரூப மானதுவே. (எ௱௮)

ஆனமுலத் தலக்கோண நவசந்தி யாயமையத்
தானத்துள்ளாய மதிள் சதுஷ் கோண மதாயமைந்து
காண வடுகன் விதிகடிந்துள் நின்று காவல் செயக்
கோணமோர் முன்றினொடாறுஞ்சுடராய்க் குறிக்கொளவே. (எ௱௯)

குறியொன்ரு மாகாச முச்சத் திராசியாங்கோள் நிலையாய்ச்
செறிய வதன் கீழ்ப்பூ மண்டலங் காணத் திருமாலவன்
பிறைபிறை யாகரமாக மதிபத்ம பீடமதாய்
முறையே நிலவத்துலங்கிடு நாற்பத்துமுக் கோணமே. (அ௱)

Koviloor Digital Library

நாற்பான் முக்கோண நடுவாத்து மலிங்க நாயகியாள்
தோற்றக் கணபதி வைரவன் சித்திரச் சூரியனும்
ஆற்ற லடல் வீரபத்ரன் முருகன் பிச்சாடனனும்
தோற்றத்திற் சாத்தனைத் தந்த பிரானும் துலங்குவரே. (அ௰௧)

துலங்கு மெய்ஞானத்தா ருதார மூர்த்தி சொருபமிதாய்
நிலவு மகத்திற் புறந்திக்குப் பாலகர் நின்மித்தலின்
வலவன் திருமாலு ருத்திரன் மாயை வளரறமும்
இலகுமிவை பன்னிரண்டிற் கிறையெங்களீச் வரியே. (அ௰௨)

வரிசையின் மிக்கதாய் வாசல்பதி னொன்று மாயுயர்ந்து
கரிசா மிராக மலத்தா லவலங் கனிந்து ருவாய்த்
திரிதலைத் தெய்விக மாக்கக்கும் பங்கொள் சிகரியதாய்ப்
புரிதலிற் றூல மிலிங்கா கரமாய்ப் பொலிவுறுமே. (அ௰௩)

பொலிரவி சிங்கமென மேனிலையிற் புலன்கவர
வலிய விழை பொறி வாயிலிற் பூதஞ்செய் வஞ்சனைகள்
மெலிமருத் தாகவா சூவென்று ருத்திரம் வீறுகொளக்
கலிதீர்ந்த தெய்விகக் காட்சியாங் கோட்டி கொள்காத்திரமே.
(அ௰௪)

காத்திரத் தூலத்தான் மாதத்துவம் பெற்ற காரணத்தால்
வேத்திர மோங்கு கொடி மரமாக விதிசெயவும்
ஆத்தனுர் வாயிலிற் கோபுரமாய்க் குவிந் தண்டருற
நாத்திக்கு வட்டத்து மைம்பூதங் காவலாய் நண்ணிடவே. (அ௰௫)

நண்ணுங் கருவிபுல வோர்க்குங் கன்மிக்கும் ஞானியர்க்கும்
எண்ணியாங் கெய்த நடன நடத்தை இலக்கியங்கள்
பண்ணிநல் லர்த்தமுங் கன்மமும் ஞானமாம் பாகையுமாய்த்
திண்ணிய வாயிலிற் றூண்களிற் காட்சி சிறந்திடுமே. (அ௰௬)

சிறந்த புறத்தி லகப்புறத் திற்காவல் செய்துவெளிப்
புறநோக்கு மந்தக் கரணத்தருள் வாய்ப் புறந்தனில்நால்
அறத்தி னுருவாகி நிற்க வதின் விளைவாய் விளைந்து
பிறந்திடுந் தன்மையால் வித்தையுந் தத்துவம் பெற்றிடுமே. (அ௰௭)

துவம்பெற்ற பூசனைக் கால மூன்ருகத் தொழும் நியதித்
தவர்கள்நற் கன்னி யதிரிஷி யாகச் சசி இரவி
யவரா ரியந்தமிழான கலையாய் நா மாவளியி
னுவல அருத்தனை வித்திநூ ருயிரம் நூறதுவே. (அ௰௮)

Koviloor Digital Library

நூருயிரமா மிராகம் புருடனு ருவமுடன்
றேரு மறையாகி யோலிட மாயைத் திரை மறைக்கு
மாரு லடங்கன் முறைகண்டு ஆக்கத்தான் மாசிவமாம்
பேருன தெய்த வுருத்திர சாதனம் பெற்றிடுமே. (அ௰௯)

பெற்ற வகலிய மெல்லா மடங்க பிறந்த சுத்த
வித்தாஞ் சடாக்கர நற்றமிழாய்க் காண வித்தளித்த
கத்தனே ஈசனுய்க் காண மலேவு சாதாக்கியவச்
சித்தந்தஞ் சத்தி சிவலிங்கமாகத் திகழ்ந்திடுமே. (௯௰)

திகழும் அகம் ஆன் மதத்துவம் பெற்றிடச் சேர்ந்தகத்தி
லிகல்வாசி வித்தியா தத்துவமாக வியமானனுர்
புகலாய்ச் சிவதத்துவம் பெற்று ஞானம் பொலிவிளக்கந்
தகக்கற் சிதஞ்செய்த வுண்மைக் கண்டு தரிசியுமே. (௯௰௧)

தெரிசனங் காட்டு கண் ணுடியாம் பாசத் திருகுபுறத்
திரியப் பசுவா மிடபம் பதியா மிலிங்கமுடன்
பிரியா திலயங் கொளவா லயங்கொண்டு பேறடையுஞ்
சரியையாய்ச் சைவசித்தாந்த ஞானக் காட்சி தந்திடுமே.(௯௰௨)

தந்தை சினஞ் செய்த போது மசலமதாய் மலேபோற்
சிந்தை கிரியியை பாந்தண்டி ஆலமர் தேசிகனுய்
எந்தை இயோக நெறிகாட்டல் ஞானமிணே யறையும்
விந்தைக் கிரியை இயோகஞா ஞுதி விளக்கமதே. (௯௰௩)

விளங்கு புவனமநு வன்னமுங் கலேமேவுபதம்
அளவெண்ணுன் கேழும் எழுகோடி யைம்பத் தொன்றைந்
தெண்பதொன்
றுளதீபா ரார்த்தனே வேள்விவாத் யந்துய் திறந்துதியின்
வளமாம் நிரணிறையாய் நோக்க வாறத்து வாவுருவே. (௯௰௪)

உருவாய் நிலேயற்ற கோளொன்ப தீசனே யுள்ளமதிற்
கருதாத ஈசான்னி யற்காயத் திக்கிற் கலந்துநிற்றல்
விருதா வாய்க் கண்டதைக் காணுதைச் சொல்லும்
வீணருக்காங்
கருகா மையினு மறையல் போதாந்தங்க லாந்தமதே. (௯௰௫)

Koviloor Digital Library

அந்தமில் லாத பதிபசுபாச மதாய்க் குணக்கின்
வந்து தரிசிக்க ஐங்கரன் வேதன்மால் மாயையைச்சி
னந்தூர்த்துவ தாண்டவஞ்செய் யுருத்திர ஞரயினி
யந்தமா கேசராய்த் தெற்கிற் சதாசிவ மாடிடுமே. (கூ௰சா)

ஆடல் தெரிசித்து மேற்றிசையிற் செல்ல வாறுமுக
னேடம்மை யுற்ற குளக்கரை தோன்றுங் கண்டுத்தரத்தில்
நாட வடியா ரரனுரு வாய்த் தோற்ற நல்கி நிற்கும்
கூடந்தரி சனமாகுமாறந்தக் குறியிதுவே. (கூ௰எ)

குறித்தசித் தாந்தம்வே தாந்தநா தாந்தமுங் கூடிநிற்கு
நெறியாமி யோகாந்த மாமிவை சூழ நிலைமையுற்ற
அறிவுரு வாங்கற் பகத்திற் பிரமரஅந்திரமாஞ்
சிறிய துளைகும் பகங் கொள்ள நிற்குஞ் சினகரமே. (கூ௰அ)

சினகரத் தாலயம் நடனனின் மந்திரஞ் சேயவனல்
லினத்தி நிலயம் ஓ ராயிரங் காற் கூடத்திற் கோட்டமா
தனவடிவான தளத்திற் றளியுமூர்த் தத்தனிற்றெக்
கிணமுத்தரங் கூடு மஞ்சனத் தாற் சேதிமமுமென்றே. (கூ௰கூ)

என்றுந் திருக்கோயில் நாமம் வழங்கு மிவைகளெலாம்
ஒன்று படநிற்குந் தில்லைச் சிதம்பரத் தோங்கு மெழில்
மன்று வளர்கோயில் கோயிலென்றே பேர் வழங்க நமக்
கென்றுஞ் சதமா மிலிங்கம்பது மமுற் றீற்றதுவே. (ரா)

முற்றுட னீரு யனைத்திற்கும் நின்ற முழுமுதனூல்
கற்றவர் கேட்டவர் தன்குறிக் கோளுமுக் காலமுணர்
வுற்றநற் சிந்தையும் பெற்றிவ் விகத்தி லுயர்நலமும்
மற்றும் பரத்திற் பரானந்த வாழ்வு மடைகுவரே.

இலிங்கபுராணம் பத்மபுராணம்

நிறைவு பெற்றது.

Koviloor Digital Library

விளக்கவுரை

இருபத்தோராயிரத்து அறுநூறுமைல் சுற்றளவு கொண்ட பூமியே

(விச்வ லிங்கம்`,

அதில் நாள்மீன் இருபத்தேழும் அபிஜித் ஒன்றும் ஆகிய இருபத்தெட்டில் இரவிமதி யாதிபத்தியத்தால் இரட்டித்துள்ள ஐம்பத்தாறு தேசமே.

(செக நாதலிங்கம்)

மலையும் யாறும் சூழ்ந்த இவ்வைம்பத்தாறுடன் பொன் மேருச் சிகரமும் அதிற்கால் கொண்டெழுந்த திருக் கோணமலை - திருச்சிராமலை - திருக்காளத்திமலை ஆகிய நான்குங் கூடிய அறுபதே.

(அட்சயலிங்கம்)

இந்த அட்சய லிங்கம் அறுபதுள் இராசி பனிரெண்டும் கோள் ஒன்பதும் நாள்மீன் இருபத்தேழும் கூடிய நாற்பத்தெட்டும் அமைவுபெற மூர்த்தி தலம் தீர்த்தம் ஆக வமைந்த நூற்றெட்டே.

(திருப்பதி லிங்கம்)

இந்தத் தூலலிங்கத்திற் சூக்கும நிலத்தலமான விருப்த்தேழும் அமித பூரகங் கொள்ள வரும் இருநூற்றெழுபதுடன் அமித பூரக வேதை கொள்ளும் ஐந்தாய் விளங்கும் மலைத்தளங்களும் கூடிய இருநூற்றெழுபத்தைந்துமே (சித்தாந்தலிங்கம்) இந்தஇரு நூற்றெழுபத்தைந்து தலங்களும் திரு நெறிய தமிழ் மறைப் பாடல்பெற்றுள்ளன.

இவ்விரு நூற்றெழுபத்தைந்து தலங்களும் அமித பூரகமாகக் கொண்டமைந்த ஆதார சூக்குமத் தலங்கள். வீரட்டத்தலம் (அ) சத்தத் தானம் (எ) நவக்கோளாதிபர் தலம் - (கூ) சந்தித் தானம் (௩) ஆக - உயள - ம் - (சூக்குமலிங்கம்).

இவற்றில் வழிபடற் கதீதமாயுள்ள சோதி லிங்கம் விச்வலிங்கம் செகநாத லிங்கம் அட்சய லிங்கம் ஆகிய நான்கையும் ஒருமைப்பாடுள்ள விஷீ புண்ய காலத்திலும் அதிலிருகூறுகிய அயணபுண்ய காலத்திலும் அவ்வொன்றின்

Koviloor Digital Library

முக்கூருகிய ஷட சீதி விஷ்ணுபதி புண்ய காலத்தினும் அமாவாசை யுகாதி அமாவாசை மன்வாதியாகிய நான்கு புண்ணிய காலங்களிலும் முறையே குளம் அருவி ஆறு கடல் ஆகிய இடங்களில் தற்பணங்காணலில் எட்டாமனின்ற அது இதுவாய்க் காணுங் கிரியையே அதீதலிங்கம். இதற்குரியமூர்த்தி ஆகமம் இலிங்கம் ஆவன.. சுரு. (45) வது செய்யுள் முதற் காண்க.

இவ்வதீத லிங்கக் கிரியா மூர்த்திகள் ஒன்பதற்கும் ஆகமம் ஒன்பது லிங்கம் ஒன்பது தூல காரண சூக்கும இயலால் இபத்தேழாகி யொன்று கூடிய இருபத் தெட்டாய் முற்கூறிய எல்லாவற்றையும் அடங்கக் கொண்டு நிற்பதால் பூரண லிங்கம் எனப்படும்.

இப்பூரண லிங்கத்தின் அமைவு பெறும் பொருட்களைப் பெற்று உருவாய் விளங்கும் மூர்த்தியையுடைய தலங்கள் இருபத்-தெட்டிலுள்ள லிங்கங்கள் இருபத்தெட்டே (அமிர்தலிங்கம்)

அமிர்த பூரணு கார அடங்கலும் இலிங்கத்திரு வுருவாக நிற்கும் நிலையின் அகமாயும் புறமாயும் தோன்றிச் சமைந்த ஆருதாரச் சோதியில் - கணபதி - அவந்தியில் மாகாளேச் சுரலிங்க மாகவும் - வைரவன் - காசியில் விச்வேசலிங்கமாகவும் - சித்திரக்கூத்தன் - இமையத்தில் கேதாரேச்சுர லிங்கமாகவும் - வீரபத்திரன் நர்மதா ஓங்காரலிங்கமாகவும் - முருகன். திருப்பருப் பதத்தில் - மல்லிகார்ச்சுன லிங்கமாகவும் - சாத்தன் தாருகாவனத்தில் தாருகேச்சுர லிங்கமாகவும் ஆக அகச்சமையம் ஆறின் மூர்த்திகளாய் நிற்கத் திக்கு பாலகர் சுஷராஷ்டிரத்தில் சோமநாத லிங்கமாகவும் பிரமன் சீவாலயத்தில் குச்மேச்சுரலிங்கமாகவும் திருமால் சேதுவில் ராமேச்சுரலிங்கமாகவும் - உருத்திரன் கௌதமியில் திரியம்பகேச்சுரலிங்கமாகவும், மாயை சிதாபுரத்தில் வைத்தியநாத லிங்கமாகவும் அறம்டாகினியில் - பீமசங்கரலிங்கமாகவும் - ஆகப் புறச்சமையம் ஆறின் மூர்த்திகளாய் நின்று பன்னிரண்டு சமையப் பொருளும் ஒன்றே எனவிளக்கும் சோதியா யமையலால் சோதிலிங்கம் பன்னிரண்டு எனப்பெறும்.

இப்பன்னிரண்டிற் காணுதிபத்தியத்திற்குச் சரியை கிரியையும் வைரவத்திற்கு அனுட்டான முத்திரையும் சௌந்திகத்திற்கு

Koviloor Digital Library

அணியெச்சமும் பாசுபதத்திற்கு ஞானமும் கௌமாரத்திற்குச் சாந்தி தவமும் சாக்தத்திற்கு யோகமும் ஆகிய ஆறு சாத்திரம் அமைவுபெறும் இவ்வாறே உலகாயதத்திற்குச் சோதியமும் பவுத்தத்திற்கு வேதமும் ஆருகதத்திற்கு யாகமும் மீமாஞ்சத்திற்கு நியதியும் சமணத்திற்கு வைத்தியமும் பாஞ்சராத் திரத்திற்கு மந்திரமும் ஆகிய ஆறு சாத்திரம் அமைவு பெறும். இவைகள் பன்னிரண்டாக இருப்பினும் ஒரே பொருளின் அகமாகவும் புறமாகவும் இருப்பதாலும் அகத்தை விட்டு புறமும் புறத்தை விட்டு அகமும் இருக்கமுடியாதாகை யாலும் சாத்திரம் ஆறேயாயிற்று.

இவ்வாருன சாத்திர லிங்கங்கள் எல்லாமும் தாஞக அமைந்த வொன்றே இடைமருதீசலிங்கம் ஆக நிறைவு பெறும்.

Koviloor Digital Library

அரி ஓம் நன்றுக குரு வாழ்க குருவே துணை

1. க. அசுவதி. திருப்பறியல் வீரட்டம்.
பண் : மேகராகக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்த னெனத்தகும் வீரட்டத் தானே. (க)

நறுநீ ருகுங்காழி ஞானசம் பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவல மறும்பிறப் புத்தானே (யக)

திருச்சிற்றம்பலம்

2. பரணி. திருக்கடவூர் வீரட்டம்.
பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சடையுடை யானுநெய் யாடலா னுஞ்சரிகோவண
உடையுடை யானுமை யார்ந்தவொண் கண்ணுமை கேள்வனும்
கடையுடை நன்னெடு மாடமோங் குங்கடவூர் தனுள்
விடையுடை யண்ணலும் வீரட்டா னத்தர னல்லனே (க)

வெந்தவெண் ணீறணி வீரட்டா னத்துறை வேந்தனை
அந்தணர் தங்கட வூருளா னையணி காழியான்
சந்தமெல் லாமடிச் சாத்தவல் லமறை ஞானசம்
பந்தன செந்தமிழ் பாடியா டக்கெடும் பாவமே (யக)

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

3. கார்த்திகை. கோயில்.
பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஆடினாய்நறு நெய்யொடு பால் தயிர் அந்தணர் பிரியாத
சிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல்கீதமும் பல்சடைப்பனி கால்கதிர்
வெண்டிங்கள்
சூடினாயருளாய் சுருங்கஎம் தொல்வினையே........ (க)

நாறுபூம்பொழில் நண்ணியகாழியுள் நான்மறைவல்ல
ஞானசம்பந்தன்
ஊறுமின்தமிழா லுயர்ந்தாருறை தில்லைதன்னுள்
ஏறுதொல்புக ழேந்து சிற்றம்பலத்தீசனை யிசையாற்
சொன்னபத்திவை
கூறுமாறுவல்லா ருயர்ந்தாரொடுங் கூடுவரே....... (யக)

திருச்சிற்றம்பலம்

4. ரோகிணி. திருவிற்குடி வீரட்டம்.
பண் : நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

வடிகொள் மேனியர் வானமா மதியினர் நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ் சடையினர் கொடியினருடைபுலிய
தளார்ப்பர்
விடையதேறுமெம் மானமர்ந் தினிதுறை விற்குடி வீரட்டம்
அடிய ராகிநின் றேத்தவல் லார்தமை அருவினை யடையாவே...
(க)

விலங்க லேசிலை யிடமென வுடையவன் விற்குடி வீரட்டத்
திலங்கு சோதியை யெம்பெரு மான்றனை யெழில்திகழ் கழல்பேணி
நலங்கொள் வாழ்பொழிற் காழியுள் ஞானசம் பந்தனற் றமிழ்மாலை
வலங்கொ டேயிசை மொழியுமின் மொழிந்தக்கால் மற்றது
வரமாமே....... (யக)

Koviloor Digital Library

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

5. மிருகசீரிடம். திருஆலவாய்.
பண் : காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆல வாயான் திருநீறே. (க)

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. (யக)

திருச்சிற்றம்பலம்

6. திருவாதிரை. திருகோவலூர் வீரட்டம்.
பண் : நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

படைகொள் கூற்றம் வந்துமெய்ப் பாசம்விட்ட போதின்கண்
இடைகொள்வா ரெக்கிலே யெழுகபோது நெஞ்சமே
குடைகொள் வேந்தன் மூதாதை குழகன்கோவ லூர்தனுள்
விடையதேறுங் கொடியினுன் வீரட்டானஞ் சேர்துமே...... (க)

கழியொடுலவு கானல்சூழ் காழிஞான சம்பந்தன்
விழிகள்தீரச் சொன்னசொற் பாவநாச மாதலால்
அழிவிலீர்கொண் டேத்துமி னந்தண்கோவ லூர்தனுள்
விழிகொள் பூதப் படையினுன் வீரட்டானஞ் சேர்துமே.....(யக)

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

சிவமயம்

7. புனர்பூசம். திருஅண்ணாமலை.
பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே. (க)

வெம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமு வெயிலெய்தவ னண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவ ரடிபேணுதல் தவமே..... (யக)

திருச்சிற்றம்பலம்

8. பூசம். திருகுறுக்கை வீரட்டம்.
பண் : திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

ஆதியிற் பிரமனார்தா மர்ச்சித்தா ரடியிணைக்கீழ்
ஓதிய வேதநாவ ருணருமா றுணரலுற்றார்
சோதியும் சுடராய்த் தோன்றிச் சொல்லினை யிறந்தார்பல்பூக்
கோதிவண் டறையுஞ்சோலைக் குறுக்கை வீரட்டனாரே..... (க)

எடுத்தன னெழிற்கயிலை யிலங்கையர் மன்னன்றன்னை
அடுத்தொரு விரலாலூன்ற வலறிப்போ யவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைநரம்பால் வேதகீ தங்கள்பாடக்
கொடுத்தனர் கொற்றவாளள் குறுக்கை வீரட்டனாரே. (யக)

திருச்சிற்றம்பலம்

9. ஆயில்யம். திருப்பழூவூர் வீரட்டம்.
பண் : இந்தளம்

திருச்சிற்றம்பலம்

முத்தன்மிகு மூவிலைநல் வேலன்விரி நூலன்
அத்தனெமை யாளுடைய அண்ணலிட மென்பர்

Koviloor Digital Library

மைத்தழை பெரும்பொழிலின் வாசமது வீசும்
பத்தரொடு சித்தர்பயில் கின்றபழு வூரே.... (க)

அந்தணர்க ளானமலை யாளரவ ரேத்தும்
பந்தமலி கின்றபழு வூரரனை யாரச்
சந்தமிகு ஞானமுணர் பந்தனுரை பேணி
வந்தவண மேத்துவர் வானமுடை யாரே..... (யக)

திருச்சிற்றம்பலம்

10. மகம். திருஅதிகை வீரட்டானம்.
பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

குண்டைக் குறட்பூதங் குழும அனலேந்திக்
கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்ட தொடையலா னுடும்வீரட் டானத்தே..... (க)

ஞாழல் கமழ்காழி யுள்ஞான சம்பந்தன்
வேழம் பொருதெண்ணீ ரதிகைவீரட் டானத்துச்
சூழுங் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழுந் துணையாக நினைவார் வினையிலரே..... (யக)

திருச்சிற்றம்பலம்

11. பூரம். திருக்கண்டியூர் வீரட்டம்.
பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

வினவினேனறி யாமையில்லுரை செய்ம்மினீரருள் வேண்டுவீர்
கனைவிலார் புனற்காவிரிக்கரை மேயகண்டியூர் வீரட்டன்
தனமுனேதனக் கின்மையோதம ராயினுரண்ட மாளத்தான்
வனனில் வாழ்க்கைகொண் டாடிப்பாடியிவ் வையமாப்பலி தேர்ந்ததே.
(க)

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
46359

Koviloor Digital Library

கருத்தனைப் பொழில்சூழுங் கண்டியூர் வீரட்டத்துறை கள்வனை
அருத்தனைத் திறமடியர்பால் மிகக் கேட்டுகந்த வினவுரை
திருத்தமாந் திகழ் காழிஞான சம்பந்தன் செப்பிய செந்தமிழ்
ஒருத்தராகிலும் பலர்களாகிலு முரை செய்வாருயர்ந்தார்களே..... (யக)

திருச்சிற்றம்பலம்

12. உத்திரம். திருவானைக்கா.
பண் : இந்தளம்

திருச்சிற்றம்பலம்

மழையார் மிடறு மழுவா ளுடையாய்
உழையார் கரவா உமையாள் கணவா
விழவா ரும்வெண்நா வலின்மே வியஎம்
அழகா எனுமா யிழையா ளவளே..... (க)

வெண்நா வலமர்ந் துறைவே தியனைக்
கண்ணார் கமழ்கா ழியர்தந் தலைவன்
பண்ணோ டிவைபா டியபத் தும்வல்லார்
விண்ணோ ரவரேத் தவிரும் புவரே..... (யக)

திருச்சிற்றம்பலம்

13. அஸ்தம். திருவையாறு.
பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

கலையார் மதியோ டுரநீரும்
நிலையார் சடையா ரிடமாகும்
மலையா ரமுமா மணிசந்தோ
டலையார் புனல்சேரு மையாறே..... (க)

கலையார் கலிக்கா ழியர்மன்னன்
நலமார் தருஞான சம்பந்தன்
அலையார் புனல்சூ ழுமையாற்றைச்
சொலுமா லைவல்லார் துயர்வீடே..... (யக)

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

சிவமயம்

14. சித்திரை. திருப்பேணுபெருந்துறை.
பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பைம்மாநாகம் பன்மலர்கொன்றை பன்றிவெண்கொம்
பொன்று பூண்டு
செம்மாந்தையம் பெய்கென்று சொல்லிச் செய்தொழில்
பேணியோர் செல்வர்
அம்மானேக்கிய யந்தளிர்மேனி யரிவையோர்பாக மமர்ந்த
பெம்மானல்கிய தொல்புகழாளர் பேணு பெருந்துறையாரே.....
(க)

கடையார்மாட நன்கெழுவீதிக் கழுமலவூரன் கலந்து
நடையாரின்சொல் ஞானசம்பந்தன் நல்லபெருந்துறை மேய
படையார்சூலம் வல்லவன்பாதம் பரவிய பத்திவை வல்லார்
உடையாராகி யுள்ளமுமொன்றி யுலகினில் மன்னுவர் தாமே.....
(யக)

திருச்சிற்றம்பலம்

15. சுவாதி. திருப்பழனம்.
பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ் சூழப் பொலியவருவார் புலியினுரி தோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே. (க)

வேய்முத்தோங்கி விரைமுன்பரக்கும் வேணுபுரந் தன்னுள்
நாவுய்த்தனைய திறலால்மிக்க ஞானசம்பந்தன்
பேசற்கினிய பாடல்பயிலும் பெருமான் பழனத்தை
வாயிற்பொலிந்த மாலைபத்தும் வல்லார் நல்லாரே..... (யக)

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

சிவமயம்

16. விசாகம். திருஆரூர்.
பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சித்தந் தெளிவீர்காள் அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ முத்தி யாகுமே..... (க)

பிறவி யறுப்பீர்காள் அறவன் ஆரூரை
மறவா தேத்துமின் துறவி யாகுமே..... (உ)

சீரூர் சம்பந்தன் ஆரூரைச் சொன்ன
பாரூர் பாடலார் பேரா ரின்பமே..... (யக)

திருச்சிற்றம்பலம்

17. அனுஷம். திருச்சோற்றுத்துறை.
பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்ப னென்னு தருளே துணையாக
ஒப்ப ரொப்பர் பெருமா னொளி வெண்ணீற்
றப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே..... (க)

அந்தண் சோற்றுத் துறையெம் மாதியைச்
சிந்தை செய்ம்மி னடியா ராயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே...... (கக)

திருச்சிற்றம்பலம்

18. கேட்டை. திருவேதிகுடி.
பண் : திருவிராகம்

திருச்சிற்றம்பலம்

நீறுவரி யாடரவொ டாமைமன என்புநிரை பூண்பரிடபம்
ஏறுவரி யாவரு மிறைஞ்சுகழ லாதிய ரிருந்தவிடமாம்
தாறுவிரி பூகமலி வாழைவிரை நாறவிணை வாளைமடுவில்
வேறுபிரி யாதுவிளை யாடவள மாரும்வயல் வேதிகுடியே.....(க)

Koviloor Digital Library

கந்தமலி தண்பொழில்நன் மாடமிடை காழிவளர் ஞானமுணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு வேதிகுடி யாதிகழலே
சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்களென்ன நிகழ்
வெய்தியிமை யோர்
அந்தவுல கெய்தியர சாளுமது வேசரத மாணை நமதே..... (கக)

திருச்சிற்றம்பலம்

19. மூலம். திருக்கண்டியூர்.
பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

வினைவினேனறி யாமையில்லுரை செய்ம்மினீரருள் வேண்டுவீர்
கனைவிலார் புனற்காவிரிக்கரை மேயகண்டியூர் வீரட்டன்
தனமுனேதனக் கின்மையோதம ராயினுரண்ட மாளத்தான்
வனில் வாழ்க்கைகொண் டாடிப்பாடியிவ் வையமாப்பலி தேர்ந்ததே (க)

கருத்தனைப் பொழில்சூழுங் கண்டியூர் வீரட்டத்துறை கள்வனை
அருத்தனைத் திறமடியர்பால் மிகக் கேட்டுகந்த விஞவுரை
திருத்தமாந் திகழ் காழிஞான சம்பந்தன் செப்பிய செந்தமிழ்
ஒருத்தராகிலும் பலர்களாகிலு முரை செய்வாருயர்ந்தார்களே...
(யக)

திருச்சிற்றம்பலம்

20. பூராடம். திருப்பூந்துருத்தி
பண் : திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்

கொடிகொள் செல்வ விழாக்குண லை அருக்
கடிகொள் பூம்பொழிற் கச்சிஏ கம்பனுர்
பொடிகள் பூசிய பூந்துருத்திந் நகர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே..... (க)

துடித்த தோள்வலி வாளரக்கன்றனைப்
பிடித்த கைஞ்ஞெரிந்துற்றன கண்ணெலாம்
பொடிக்க வூன்றிய பூந்துருத்திந் நகர்ப்
படிக்கொள் சேவடிக் கீழ் நாமிருப்பதே..... (யக)

Koviloor Digital Library

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

21. உத்திராடம். திருப்புள்ளிருக்கு வேளூர்.
பண் : சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே..... (க)

செடியாய வுடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே..... (யக)

திருச்சிற்றம்பலம்

22. திருவோணம். திருநெய்தானம்.
பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிட நெய்தானமெ னீரே..... (க)

தலமல்கிய புனற்காழியுள் தமிழ்ஞான சம்பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு நெய்த்தானனை நிகரில்
பலமல்கிய பாடல்லிவை பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்னடி சேர்வர்சிவ கதியே..... (யக)

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

23. அவிட்டம். இராமேச்சுரம்.
பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

அலைவளர் தண்மதி யோடய லேயடக் கியுமை
முலைவளர் பாகமு யங்கவல் லமுதல் வன்முனி
இலைவளர் தாழைகள் விம்முகா னலிரா மேச்சுரம்
தலைவளர் கோலநன் மாலையன் தானிருந் தாட்சியே..... (க)

பகலவன் மீதியங் காமைக்காத் தபதி யோன்றனை
இகலழி வித்தவ னேத்துகோ யிலிரா மேச்சுரம்
புகலியுள் ஞானசம் பந்தன்சொன் னதமிழ் புந்தியால்
அகலிட மெங்குநின் றேத்தவல் லார்க்கிலை யல்லலே..... (யக)

திருச்சிற்றம்பலம்

24. சதயம். திருக்குறுந்தொகை 5ஆம் திருமுறை.
சரம் : திருக்கடம்பந்துறை

திருச்சிற்றம்பலம்

முற்றிலாமுலை யாளிவ ளாகிலும்
அற்றந் தீர்க்கும் அறிவில ளாகிலும்
கற்றைச் செஞ்சடை யான்கடம் பந்துறைப்
பெற்றம் ஊர்தியென் றாள்எங்கள் பேதையே..... (க)

நூலால் நன்று நினைமின்கள் நோய்கெடப்
பாலான் ஐந்துடன் ஆடும் பரமனூர்
காலான் ஊன்றுகந் தான்கடம் பந்துறை
மேலா னுஞ்செய்த வல்வினை வீடுமே..... (யக)

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

25. பூரட்டாதி. திருக்கேதீச்சுரம்.
பண் : நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவில் நாணர வாஅன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே..... (க)

மாடெ லாமண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்கே தீச்சரத் தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல் நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள் பரகதி பெறலாமே..... (யக)

திருச்சிற்றம்பலம்

26. உத்திரட்டாதி. திருக்குறுந்தொகை.
திறம் : திருவாட்போக்கி

திருச்சிற்றம்பலம்

கால பாசம் பிடித்தெழு தூதுவர்
பால கர்விருத் தர்பழை யாரெனர்
ஆல நீழல் அமர்ந்தவாட் போக்கியார்
சீல மார்ந்தவர் செம்மையுள் நிற்பரே..... (க)

இரக்க முன்னறி யாதெழு தூதுவர்
பரக்க ழித்தவர் பற்றுதன் முன்னமே
அரக்க னுக்கருள் செய்தவாட் போக்கியார்
கரப்ப துங்கரப் பாரவர் தங்கட்கே..... (ம)

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

27. ரேவதி. திருஈங்கோய்மலை.
உபயம் பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வானத்துயர்தண் மதிதோய்சடைமேல் மத்தமலர் சூடித்
தேனொத்தனமென் மொழிமான்விழியாள் தேவிபாகமாக்
கானத்திரவி லெரிகொண்டாடுங் கடவுளுலகேத்த
ஏனத்திரள்வந் திழியுஞ்சார லீங்கோய்மலை யாரே..... (க)

விழவாரொலியு முழவுமோவா வேணுபுரந் தன்னுள்
அழலார்வண்ணத் தடிகளருள்சே ரணிகொள் சம்பந்தன்
எழிலார் சுனையும் பொழிலும் புடைசூ ழீங்கோய் மலையீசன்
கழல்சேர் பாடல் பத்தும்வல்லார் கவலை களைவாரே..... (௰க)

திருச்சிற்றம்பலம்

தினம் அந்த அந்த நட்சத்திரத்தன்று ஓதிவர சுய உணர்வு மேலிட சுய ஓதணன் ஆகி சுதர்சணமாகி திருவருளாகிய குருவருள் பெற்று அரும்பு, மலர், காய், கனி ஆவது போல் நாம்பக்குவம் அடையலாம் என எழுதி நிறைவு செய்கின்ரேம்.

Koviloor Digital Library

நட்சத்திரம் 28			சூக்கும்லிங்கம் ஆகிய வீரட்டம் ௮(8). சத்தத்தானம் ௭(7), வலியாதியர் (நவக்கோள்) ௯ (9) நவநாயத்தலம் சந்தித்தானம் ௩ (3)
௧.	அச்வதி	- வீரபத்திரன்	- திருப்பறியல் வீரட்டம்
௨.	பரணி	- காலகாலன்	- திருக்கடவூர் வீரட்டம்
௩.	ரோகிணி	- சலந்தாரி	- திருவிற்குடி வீரட்டம்
௪.	திருவாதிரை	- அந்தகாரி	- திருக்கோவலூர் வீரட்டம்
௫.	பூசம்	- காமாரி	- திருக்கொறுக்கை வீரட்டம்
௬.	ஆயில்யம்	- கெஜாரி	- திருப்பழுவூர் வீரட்டம்
௭.	மகம்	- புராரி	- திருவதிகை வீரட்டம்
௮.	பூரம்	- வைரவர்	- திருக்கண்டியூர் வீரட்டம்
௯.	அஸ்தம்	- ஞாயிறு	- திருவையாறு
௰.	சுவாதி	- திங்கள்	- திருப்பழனம்
௰௧.	அநுடம்	- செவ்வாய்	- திருச்சோற்றுத்துறை
௰௨.	கேட்டை	- புதன்	- திருவேதிகுடி
௰௩.	மூலம்	- வியாழன்	- திருக்கண்டியூர்
௰௪.	பூராடம்	- வெள்ளி	- திருப்பூந்துருத்தி
௰௫.	திருவோணம்	- சனி	- திருநெய்த்தானம்
௰௬.	கார்த்திகை	- ரவி	- திருத்தில்லை
௰௭.	மிருகசீரிடம்	- மதி	- திருஆலவாய்
௰௮.	புனர்பூசம்	- சேய்	- திருஅண்ணமலை
௰௯.	உத்தரம்	- மால்	- திருஆனைக்கா
௨௰.	சித்திரை	- பொன்	- திருப்பெருந்துறை
௨௰௧.	விசாகம்	- கவி	- திருவாரூர்
௨௰௨.	உத்திராடம்	- காரி	- திருப்புள்ளிருக்கு வேளூர்
௨௰௩.	அவிட்டம்	- ராகு	- திருஇராமேச்சுரம்
௨௰௪.	பூரட்டாதி	- கேது	- திருகேதீச்சுரம்
௨௰௫.	சதயம்	- சரம்	- திருக்கடம்பர் கோயில்
௨௰௬.	உத்திரட்டாதி	- திரம்	- திருஐயடிசுர்மலை
௨௰௭.	ரேவதி	- உபயம்	- திருஈங்கோய்மலை

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR
A. No. 46359
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

இந்நூலைப் பற்றி.....

சிவாயநம என்று நால்வர் அரனார் திருவடி சார்ந்த உபாயமாம் கற்றமறையாம் கலை ஞான உண்மை எல்லாம் ஆவதொரு நூலாக்கி அதற்கு இலக்கணம் இந்நூல் தெளிவாக இயம்புகிறது. நாடும் நகரமும் நல் திருக்கோயிலும் சென்று பதிகம் பாடியதன் சூட்சமமும் இந்நூல் இயம்புகிறது. உலகில் அனைத்தும் இலிங்காகாரமே என இயம்புகிறது. அண்டத்தில் இருப்பது எல்லாம் பிண்டத்தில் உள்ளது என மிகத் தெளிவாக எம் ஞானத் தெளிவு குரு உலகம் உய்ய ஒவ்வொரு மானிடனும் அவர் அவர் நட்சத்திரங்களுக்குரிய கோயில்கள் இன்னது என்றும் பதிகம் ஓதி உய்யலாம் என்றும் கலியின் கொடுமை தீர முழுமுத நூல் இது சமயம் வெளி வருகிறது. திருக்கோயில்களின் சூட்சமத்தை அறிந்து நம் ஔவைப் பாட்டி அமிழ்த மொழி "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" முன்னோர்களாகிய ஞானியர்கள் நமக்கு ஆக்கித் தந்த அருட்செல்வமாகிய நூல்களை வாசிப்போம். வாசித்து வாழ்வை வாழ்வாங்கு வாழ்வோம் என வாழ்ந்து காட்யடிவர்கள் வழியைப் பின்பற்றஇந்நூல் உதவும். இந்நூல் கற்றவர்கள். கேட்டவர்கள் இம்மையில் உயர் நலமும் மறுமையில் பரானந்த வாழ்வும் அடைவார்கள் என எழுதி நிறைவு செய்கிறோம்.

இவண்
முத்தமிழ் வேதத் திருச்சபையார்
இராம. ஆதிரெத்தினம்
பிசு. இசக்கியப்பன்
சிவ. கார்த்திக்
இணைச் செயலாளர்கள்